கஞ்சமி செட்டியார் பள்ளு

பதிப்பு
பூ. சித்திரைமதி

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005.
ஜூலை-2008

கஞ்சமி செட்டியார் பள்ளு

பதிப்பு
பூ.சித்திரைமதி

நெறியாளர்
வீ. அரசு
பேராசிரியர் - தலைவர்

தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை - 600 005
ஜூலை - 2008

சுவடியியலும் பதிப்பியலும்
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு
எண்: 53010701

நெறியாளர் சான்றிதழ்

வீ. அரசு,
பேராசிரியர் - தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'கஞ்சமி செட்டியார் பள்ளு' எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியைச் **'சுவடியியலும் பதிப்பியலும்'** எனும் பட்டயப் பேற்றிற்காக **பூ. சித்திரைமதி** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப்பு இவர்தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

(வீ. அரசு)

நாள் :

இடம் : சென்னை - 5

பதிப்பாளர் உறுதிமொழி

பூ. சித்திரைமதி
முதுகலை முதலாம் ஆண்டு,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'சுவடியியலும் பதிப்பியலும்' என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்பெறும் **'கஞ்சமி செட்டியார் பள்ளு'** என்னும் பதிப்பேடு என் சொந்த முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்,

பூ. சித்திரைமதி

(பூ. சித்திரைமதி)

நாள் :

இடம் : சென்னை - 5

உள்ளடக்கம்

	பக்கம்
பதிப்புரை	1
நன்றியுரை	9
கஞ்சமி செட்டியார் பள்ளு	11
பின்னிணைப்பு	
1. பாடல் முதற்குறிப்பு அகராதி.	73
2. பள்ளு இலக்கியப் பட்டியல். (காலவரிசையில்)	78
3. சொல்லடைவு.	82
4. துணைநூற்பட்டியல்.	102

பதிப்புரை

தொல்காப்பியர் தமிழ் நிலத்தை ஐந்து வகையாக பிரித்தார். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும். அவற்றுள் மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த இடமாகும். அந்நிலத்தில் வாழ்ந்த மக்கள் உழவுத் தொழிலைச் செய்து வந்தனர். அவர்களுடைய வாழ்க்கையை மையமாகக் கொண்டு கவிஞர்கள் அக்காலத்தில் பாடல்கள் புனைந்துள்ளனர். 'உழத்திப் பாட்டு' என்பது அவ்வாறு உருவான இலக்கிய வகையாகும். உழத்தி அரசனை வாழ்த்தி, உழவுத் தொழிலின் மேன்மையைப் பத்துப் பாடல்களில் கூறும் இலக்கிய வகை 'உழத்திப்பாட்டு' என்று பன்னிரு பாட்டியல் என்ற இலக்கண நூல் கூறுகிறது (ப.பா. 216). உழவர் வாழ்க்கையை புனைந்து உரைப்பதால் இது உழத்திப்பாட்டு எனப்பெறுகிறது. இவ்வகை இலக்கியம் உருவாவதற்கு உரிய கரு தொல்காப்பியச் செய்யுளியலில் காணப் பெறுகிறது.

நூலுக்குரிய எட்டு வகை வனப்புகளில் ஒன்றான 'புலன்' என்ற வகையைத் தொல்காப்பியம்,

"சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே"

(தொல்.செய்யுளியல்- 5532)

"வழக்குச் சொல்லினானே தொகுக்கப்பெற்று, ஆராய வேண்டாமல் பொருள் விளங்குவது புலனென்னும் செய்யுளாம்" என இளம்பூரணர் இதற்கு உரை எழுதுகிறார்.

இதற்குத் தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவரான பேராசிரியர், "அவை விளக்கத்தார் கூத்து முதலாகிய நாடகச் செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள் போல்வன என்பது கண்டுகொள்க" என்று கூறியுள்ளார்.

தொல்காப்பிய உரையாசிரியர்களின் குறிப்புகளில் இருந்து அக்காலத்தில் பாமர மக்களின் வழக்குச் சொற்களை அடிப்படையாக வைத்து இலக்கியங்கள் தொல்காப்பியர் காலத்திலும் ஆக்கப்பட்டன என்பதும், அவ்வகை இலக்கியத்தில் ஆடலும், பாடலும் இடம் பெற்றிருந்தன என்பதும் நாம் உணரத்தக்க செய்திகள்.

சிலப்பதிகாரத்தில் உழவுத் தொழிலின் சிறப்புக் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன. வயலில் நாற்று நடும்போது பெண்கள் பாடிய பாடலை - 'விருந்திற்பாணி' என்று சிலம்பு சுட்டுகிறது. உழவர்கள் போற்றும் ஏர்மங்கலப் பாடலையும் சிலம்பு சுட்டிச் செல்கிறது. இதனை 'ஏர்மங்கலம்' என்றும் 'பொன்னேர் பூட்டுதல்' என்றும் கூறுவர்.

உழவுத்தொலைப் பற்றியும் உழவர்கள் சிறப்பைப் பற்றியும் பாவாணர்கள் பாடிய பாடல்களின் ஒட்டு மொத்த

வளர்ச்சி உழத்திப்பாட்டாக உருப்பெற்றது எனக் குறிப்பிடலாம். கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பன்னிருபாட்டியல் உழத்திப் பாட்டு குறித்து இலக்கணம் கூறுகிறது. இலக்கியம் கண்டதற்குத்தான் இலக்கணம். அவர் காலத்தில் உழத்திப்பாட்டு என்ற இலக்கிய வகை இருந்திருக்கலாம்; ஆயின் இன்று அவை நமக்குக் கிடைக்கவில்லை.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தோன்றிய நவநீதப் பாட்டியலில் உழத்திப்பாட்டுப் பகுதியில் பிற்காலத்தில் எழுதப்பெற்றதாகக் கருதப்படுகின்ற நான்கு மிகைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் முக்கூடற் பள்ளுவை மனத்தில் கொண்டு எழுதப்பட்டவை என எண்ணத் தோன்றுகிறது.

மேலும், அந்நூல் 'உழத்திப்பாட்டு' பற்றி விளக்கம் சொல்லுகிற போது 'உழத்திப்பாட்டைப் பள்ளும் என்பர் என்று குறிப்பிடுகிறது.

வீரமாமுனிவர் எழுதிய சதுரகராதியில் உழத்திப் பாட்டும் பள்ளுப்பாட்டும் ஒன்றே என்ற குறிப்புக் காணப்பெறுகிறது. இவ்வாறு நவநீதப் பாட்டியலில் இடம் பெற்றிருந்த மிகைப் பாடல்கள் காரணமாக உழத்திப் பாட்டும் பள்ளுப்பாட்டும் ஒன்றே என்ற கருத்து உருவாயிற்று எனலாம்.

குறத்திப் பாட்டு குறவஞ்சி இலக்கியத்திற்கு அடிப்படையாக அமைந்தது போல் உழத்திப்பாட்டு பள்ளு இலக்கியம் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது என்று கருதுவதே ஏற்புடையதாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கிய இடம்பெறும் சில இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் என்று அழைக்கப் படுகின்றன. காப்பியங்கள் போன்று ஒரு பொருள் நுதலிய நூல்களாகவும், பல்வேறு வடிவ வேறுபாடுகளைக் கொண்டுள்ள நூல்களாகவும், பல்வேறு பாடுபொருட்களை அறிமுகம் செய்யும் நூல்களாகவும் புதுமைப் போக்கில் இவை அமைந்துள்ளன. எனவே, இவற்றை 'புதுமை இலக்கியம்' எனவும் அழைக்கலாம். இலக்கணத்தார் இதனை "விருந்தி லக்கியம்" என்று சொல்கின்றனர்.

எண்வகை வனப்பு பற்றிக் கூறும் தொல்காப்பியர் (அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு) இவற்றுள் விருந்து என்பது புதிய இலக்கிய வகையைக் குறிப்பதாகக் கூறுகிறார்.

'விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' - (தொல்.செய்-239)

காலந்தோறும் புதிய இலக்கியங்கள் செய்யப் பட்டாலும், அவை அதிகமாக இயற்றப்பட்ட காலம் 'சிற்றிலக்கியக் காலம்' எனலாம்.

பள்ளு

கி.பி.16-ஆம் நூற்றாண்டில் பள்ளு இலக்கியம் தமிழ் இலக்கியத்தில் தோற்றம் பெற்றது. 96 வகை சிற்றிலக்கியங்களுள் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் மக்களிடையே செல்வாக்கு பெற்ற இலக்கியங்கள் ஆகும். கி.பி.16-இல் கமலை ஞானப்பிரகாசரால் எழுதப்பெற்ற 'திருவாரூர்ப் பள்ளு எனும் தியாகேசர் பள்ளு' எனும் நூல் முதல் பள்ளு இலக்கியம் ஆகும். இது 'ஞானப்பள்ளு', 'ஆதிப்பள்ளு' எனவும் குறிக்கப்பெறுகிறது.

பள்ளு நூல்கள் வெண்பா, அகவல், விருத்தம், கலிப்பா, கலித்துறை, சிந்து போன்ற பல பா பாவினங்களால் இயற்றப்பெற்றுள்ளன.

பள்ளு நூல்களின் வழி பள்ளர் வாழ்க்கையை அறியலாம். மேலும் மழை வருவது குறித்தும் ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து வருவது குறித்தும் நெல்வகை, மாட்டுவகை, மீன் வகை, மருந்து வகை, ஏர் வகை முதலியவை குறித்தும் அறிந்து கொள்வதற்கு இந்நூல் துணைசெய்கின்றது.

கதை

பள்ளன் இருவேறு ஊர்களில் வாழ்ந்த இருவேறு சமயத்தைச் சார்ந்த பெண்களை மணந்து கொள்கிறான். பள்ளன் இளையபள்ளியிடம் மோகம் கொண்டு அங்கேயே தங்கிவிடுகிறான். மூத்த பள்ளி பண்ணையிடம் முறையிடுகிறாள். பண்ணைக்காரன் பள்ளனை வேலைக்கு வரச்சொல்கிறான். ஆயினும் பள்ளன் தன் வேலையில் கவனம் செலுத்தாமல் இருக்கவே மாட்டுத் தொழுவத்தில் கட்டி வைக்கப் படுகிறான். மூத்த பள்ளி இதனைக் கண்டு வருந்தி பண்ணையிடம் விடுவிக்குமாறு கூறுகிறாள். பள்ளனும் விடுவிக்கப்படுகிறான்.

பள்ளன் நிலத்தை உழும்போது மாடு முட்டி, மயங்கி விழ, அங்கு வந்த இரு பள்ளுகளும் ஏசிக்கொள்கின்றனர். மயக்கம் தெளிந்து எழுந்த பள்ளனைக் கண்டு இருவரும் மகிழ்ந்து இணைகின்றனர். இதுவே பொதுவான கதை.

நெல் வகையை எண்ணினாலும் எண்ணலாம்,
பள்ளு வகையை எண்ண முடியாது"

நெல்லை மாவட்ட பழமொழி.

கஞ்சமி செட்டியார் பள்ளு

இச்சுவடி கீழ்த்திசை சுவடிகள் நூலகம் (சென்னை) - இல் இருந்து எடுக்கப்பெற்றது. சுவடி எண் ஆர். 4561. தாள் சுவடி, ஓலைச்சுவடி இரண்டும் பார்க்கப்பெற்றது.

நூலாசிரியர்

கி.பி.17-ஆம் நூற்றாண்டில் தோன்றியதும் பள்ளு இலக்கியங்களுள் சிறப்பானதுமான முக்கூடற்பள்ளுவினை நாடக வடிவில் பிற்காலத்தில் மாற்றிய சின்னதம்பி என்னும் பெயரினை உடைய என்னயினாப் புலவரே இதன் ஆசிரியர். காலம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டாகும். நூலாசிரியர் பெயர் இதன் கண் இடம்பெற்றுள்ளது.

நூல் அமைப்பு

நூலின்கண் தொடக்கம் முதல் இறுதிவரை 32 பாடல்கள் பல்வேறு யாப்புகளில் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலுக்கு உரிய யாப்பின் பெயர் அதன் அருகிலேயே எழுதப்பெற்றுள்ளன.

எழுத்து அமைப்பு முறை:

இச்சுவடியில் எழுதப் பெற்றுள்ள எழுத்துகளில் சில எழுத்துகள் கூட்டு எழுத்துகளாக அமைந்துள்ளன. இந்நூலில் ரகர றகர மாற்றங்கள் உள்ளன.

வர்ணம்	-	வற்ணம்
கர்ணன்	-	கற்ணன்

ஆயிரம் கிரந்தங்களைக் கொண்டுள்ளது.

நூற்பெயர்க் காரணம்:

பொதுவாக இலக்கியங்கள் நூற்பெயர் பெறும் நிலையில் பாட்டுடைத் தலைவன் அருஞ்சிறப்புகள் முதன்மைப் படுத்தப்படுகின்ற காரணத்தால் அவனது பெயரினையே கொண்டு அமைகின்ற தன்மை காணப் பெறுகிறது. அவ்வகையில் "கஞ்சமி செட்டியார் பள்ளு" என்பதும் பாட்டுடைத் தலைவன் "கஞ்சமநரேந்திரன்" பெயராலேயே அமைந்துள்ளது.

"கச்சி நகர்க் கதிபன் கஞ்சமநரேந்திரன் பட்சமுடன் பள்ளேசல் புனை தம்பிக்கு" என்று பாடப்பெற்றுள்ளது.

நூலில் வரும் பாத்திரங்கள்

முத்தப்பள்ளி, இளையபள்ளி, பள்ளன், பண்ணைக் காரன், கொலுக்காரன், குடும்பன் போன்றோர் உள்ளனர்.

நூலில் உள்ள சிதைந்த பகுதிகள்

1. கச்சைக் கட்டுத்தானு மெங்கே... எனத் தொடங்கும் பாடலில் பல வார்த்தைகள் சிதைந்துள்ளன.

2. கோலாகலமுடனே கொண்ட...என்ற விருத்தத்தின் சில அடிகளில் வார்த்தைகள் சிதைந்துள்ளன.

நன்றியுரை

'சுவடியியலும் பதிப்பியலும்' என்னும் பட்டயப் படிப்பில் சேர்ந்து பயில வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறைக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய நெறியாளர் பேராசிரியர் வீ. அரசு அவர்களுக்கும், பதிப்பு நெறிமுறைகள் பற்றிக் கூறிய விரிவுரையாளர் ய. மணிகண்டன் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பதிப்பு செம்மையான முறையில் வெளிவர உதவிய என் குடும்பத்தார்க்கும், பதிப்புப் பணியின் ஆரம்பம் முதல் புத்தக வடிவம் பெறும் வரை உதவிய ப. கலைச் செல்வி, இரா. கமலக்கண்ணன், உ. ஏழுமலை, ஜெ. பஞ்சாட்சரம் ஆகியோருக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பூ. சித்திரைமதி

கஞ்சமி செட்டியார் பள்ளு

ஹரி ஓம்

நன்றாக குருவாழ்க குருவேதுணை.

1. முதிருஞ்சுவை மதுரம்பெற மொழியுந்தமிழ் விரதன்புகழ்.
பதிகம்புனை பவன்ன்பினர் பவபஞ்சன ரமலன்
கதிருதிரும்படி பகிரண்டமு முடையும்படி யிலகும்படி நடனம்புரி
அதிருங்கழ லதிருங்கழல்.

என்பது:— முதுரந்த சுவையாய் மதுரம் பெறும்படி சொல்லப்பட்ட தமிழுக்கு விரகனாகிய ஞானசம்பந்த மூர்த்தியை தோத்திரம் பண்ணிய பதிகமாகிய தேவாரங்களைப் பூசணமாக அணியப்பட்டவர், அப்படித் தோத்திரப் பிரியனாகிய பரமேசுவரனைத் துதிக்கப் பெற்ற பாவமாகிய சென்மங்களிலே அன்புடையவர்களுடைய பாவங்களைப் பூஞ்சமாகத் தீர்க்கப்பட்ட அமலனாராகிய அதிசெயங்களை யுடையவர் கதிருதிரும்படி.

சூரியசந்திராதிபரும் உதிரும்படி பகிரண்டங்களு
முடையும்படி மறுபடிக்குச் சகலமும் உண்டாக்கி யிலகும்படி
பிரகாசிக்கும் படியாகியும் அதிரும்படி எங்கும் அதிரும்
படிக்கு நடனஞ் செய்யும் பாதத்திலே அதிரப்பட்ட
கழலாகிய வீர வெண்டையம் பொருந்திய பாதார
விந்தப் பெருமையையுடைய பரமசிவனைத் துதிசெய்வ
தென்றவாறு.

2. இரவிகள் சந்திரர் வயிரவர் விஞ்சையர் விமையவரெண்
டிசையோர்
யுரகரருந்தவர் முனிவரர் பங்கயார் ருவணநெடுங் கொடியோர்
பரவுநெருங்கவு மெங்கு நிறைந்தவர் பணியுமிடங் கிடையா
தரகவெனது கடலின் முழங்கிய அருணை பழம்பதியே.

என்பது:– இரவிகளாகிய பன்னிரண்டு சூரியரும் பதினாறு கலையுடைய சந்திரனும் அஷ்ட வயிரவரும் விஞ்சையராகிய வித்தியாதரரும், இமையவராகிய முப்பத்து முக்கோடி தேவர்களும் எண்டிசையோராகிய இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயுவு, குபேரன், யீசானிய னென்னும் அஷ்ட திக்குப் பாலகரும் யுரகராகிய பாதாள லோகத்திலுள்ள ஆதிசேஷன் முதலாகிய தேவாதிகளும், அரிதாகிய தபசிகளும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், கெருடக்கொடியுடைய மகாவிஷ்ணுவும், பிரம்மதேவன் முதலாகிய சகல தேவதைகளும் பரந்து நிறைந்து வந்து சேவிக்கும்படிக்கும், உலகங்களில் நின்று பணிய இடங்கிடைக்காமல் அரகாரவென் இன்ற சத்தம் சமுத்திர கோஷ்டத்திலும் பெரிதாகிய சத்தங்களையுடைய அருணாசல மென்னுந் தலத்தினுடைய பெருமை யென்றவாறு.

3. ஆங்கில வருஷமதில் மகரமாசம்
ஆஞ்சுபத்தான தேதிதனில் பொருந்திய வாரம்
தாங்கிய நாள் கஞ்சமனேந்திரன் மீதில்
தான்சுத்த தமிழ்ப்பள்ளே சகல சதுராய்ச் சொன்னேன்
தேங்கமுகு சீராகத் தான்மாலை மார்பன்
தெய்வமது பொன் மாலைத் தருள்குமாரன்
வாங்குமிகு ரணமிகுத்த சின்னத்தம்பி
வாத்தியார் பாடி அரங்கேற்றினாரே.

கலித்துறை

4. கச்சிநகர்க் கதிபன் கஞ்சமநரேந் திரன்மேல்
பட்சமுடன் பள்ளேசல் புனை தம்பிக்கு – வள்ளிமணாம்
தந்தந் தருளுவந்து தவும் ... ...

தும்பிக்கை யானை துணை.

விருத்தம்

5. யார்கொண்ட சீதரன் கோதண்ட பாணிபாதம் புயத்தை
பேர்கொண்டு போற்றிசெய் கஞ்சம ராசன்பெறும் புகழை

சீர்கொண்ட செந்தமிழ் பள்ளிசை யெல்லாம் சொல்லத்

தேவர்தொழும்

கார்கொண்ட கண்டத் தருள்முருக வந்தென்னைக் கார்த்தருளே

6. அசையாத செல்வமும் பெருந் தேசத்தாரு – அனைவர் புகழ்
வசமாக வருமிரு தேசத்தார் குலம்வாழ்க – வாழ்கவந்த
ராசமானெனுந் திருவேங்கிட கஞ்சம ராசந்தன் பள்ளை
நிசமாகக் கச்சியில் காமாச்சித் தாயை நினைகுவனே.

தொடையம்

7. தினதின தெந்தின தினதின தினனா
தினதின தெந்தின தினதின தின
சீர்கொண்ட வைகுந்தன் திரணம்படை கொண்ட
சுகுந்தன் திருமங்கையைப் புணர்ந்தருள் தூங்கன்

செயப்பிரசங்கன்

பார்கொண்ட பதாம்பு யாண்ட னடையன் தமிழால் உன்
பாசண்டன் பங்கயனைத் தருள் கோதண்டபாணியைப்

போற்றி

பேர்கொண்டருள் கச்சியில் வாசன் பெருங்கனத்த

வேரதறநேசன்

பெண்ணோர் விழிமாதர்கள் பலமிகு வீமன்
ஏர்கொண்டதோர் திருவேங்கிட துரைராய
னற் பேர்க்கு கஞ்சம ராசன் இசைந்தருளும்
தமிழில் பள்ளேசல் சொல்லுவோமே.

தரு (தினதின தெந்தினா)

விநாயகர் தோத்திரம்

8. தனனா தன தனனா தனை தனை தனனா
தானன தன தனா தனை
அப்பமுடன் பொரிகடலை அதிரசமும் தேனும்
நெய்யும் பயிரிளநீராரிய தாமுடனே
செப்பமதாய் ஒப்புடனே தினம் படைப்போம் கனமாய்
திருவளர் நாற்செரிவளர் சிந்துரத்தாள் துணையே.

சுந்திரஞ்சேர் மதுரையூர் சேர்க்கலி காப்தமாய
துரைமீனவள் தனையே வேண்டதுய்ய புகழ்ந்தேன்
விந்தைசெறி அடியவர்க்கு வந்தவினை யறிவர்க்கு
விண்ணவர்கள் தொழுதிரஞ்சு கண்ணகத்தாய் துணையே.

நரமுடைய இடமுடிதனை யிடற வருவுடனே
வந்தசிங்க மீதில்வாழு அந்தரியா மணியே
பரமுடன் மீண்டு சரணம் அடிகள்படி முழுதும்
புகழும் எம்மூர் பகவதிநீ துணையே.

கலிப்பா

9. செஞ்சிவேலன் புவியில் சேர்ந்தருள் வாய்ந்ததிரு
கஞ்சம நரேந்திர னந்தன் காவல்மிகு பாலைநகர்
தஞ்ச மெனந்த பள்ளன் தன்னுடனே மூத்தபள்ளி
பஞ்சடி சித்திடை துவள பள்ளியும்வந் தெய்தனனே

தரு (நெந்தினா தினா திநன்ன)

10. சிங்கக் கொழுவி ... ... ரன்மண்
சீரகத்து ... ... மார்பன்
துங்கன் ரிஷிசிங்க கோத்திர தீரன்
றணசூரன் கவி வாணருக்கு வுபகாரன்
மங்கையர்கள் மையல் கொள்ளு மன்மதரூபன்
வந்து வலங்கைக் குலங்கள்தொழு மகாராசன்
எங்கள் திருவேங்கிட கஞ்சம பூபதி நாட்டில்
ஏற்ற பண்ணை மூத்த பள்ளி தோன்றினாளே
(தோன்றினாளே)

11. காரிலங்கு குழல்கோதி – கொண்டை முடித்து
கண்ணில் கண்டபேர்கள் கொண்டாடவே கையை
நொடித்து
மார்பிலங்கு முலைகுலுங்கவே – நடித்து
முத்துமாலை தரித்தே சித்திர சேலை யுடுத்தி

சீரிலங்க பாக்கு வெள்ளிலை – மடித்து
செய்ய செம்பவளே வாய்தனிலே அருள் கடித்துப்
பாரிலங்கு கஞ்சம நரேந்திரன் நாட்டில்
பண்ணைப் பார்த்தருளு முத்தபள்ளி தோணினாளே.

கலிப்பா

12. தெள்ளு தமிழ்க் கறுதறுவை சேகரிபூபதி மகளும்
வள்ளலெனும் கஞ்சமவேள் வளர்பாலை மாநகரில்
கள்ளவிழி பார்வைசெரி காமாதிபோல் யிளைய
பள்ளிவரும் சிங்காரம் பார்க்க முடியாதே.

தரு: தெந்தினா தினாதிநன்னா தெந்தினாதினாதி நன்னா

13. ஆச்சியை மதுரை மீனாட்சியை – கோதண்ட
வாணியை தினமும் நான் தெண்டனிடுவேன்
தீர்ச்சை யுபதேசகுரு வார்த்தை
மறக்காமல் வாழும் மகிபரப்ப நரேந்திரனருள்
... ... புதல்வன்
சச்சி செய்யாமல் பொறுத்து சத்துருக்களையே வென்று
தன்னை நம்பின பேரை நன்மையில்லை ...
... சையும் கீர்த்தி பெற்ற கஞ்சம நரேந்திரன்
நாட்டில்வாழ் இளையபள்ளி தோணினாளே.

தெந்தினாதினாதி நன்னா தந்தினாதினானை

செம்பொன்னின் மீதில் சிலம்பு புலம்ப
சிறுசித்திரத் தில்தம் நெற்றிதனி லிலங்க
கும்பமுலைக ளிரண்டும் இளநீர்போல் குலுங்க காதில்
கொந்தளப் பொன்னோலை சந்திர கோர்வை துலங்க
அம்புய முகத்தில் இளம் வேர்வை
அரும்கண்டாடவே மனங்களெல்லாம் கூடிவிரும்ப
நம்பின பேர்க்கனு கூலன் கஞ்சம நரேந்திரன்
நாட்டில் வாழ் இளைய பள்ளி தோணினாளே.

விருத்தம்

14. பொற்பயில் இளையபள்ளி புகுந்தெழில் மிகுந்த செம்பொன்
வெற்பென கொங்கை பொங்க மின்னிடநின்ற நேரம்
சொற்பயில் புலவோர்வாழ்த்து சுகுமண் கஞ்சம் நரேந்திரன்
கற்பனை மறவா பள்ளன் களரியில் தோணினாளே.

தரு: தெந்தினாதி நாதினன்ன தெந்தினாதி நன்னா

15. சட்டமுடன் நீறிட்ட நெத்தி தனிலே
வெற்றிச் சந்திரகாவி வுருமாலை தலையிலேயே கட்டி
கட்டழகன் யிடையில் சித்திரக் கச்சையிறுக்கி
கன்னலில் கண்டவர் பயப்படவே மீசைமுறுக்கி
வட்டவிழித் தான்சிகப்ப மது குடித்து
வந்து வலதுகைதன்னிலே மண்வெட்டி யெடுத்து
பட்டண சுவாமி யெங்கள் கஞ்சம நரேந்திரன்
பண்ணை வயல் பள்ளவன் வந்து தோணினானே.

விருத்தம்

16. கோலாகல முடனே கொண்ட.........செய்ய
நீலாவிக....................நிலமையுள்ள கோல்காரன்
பாலாவி பூசை கொள்ளும்.........கொண்டாட
காலாகா எங்கள் கஞ்சம நரேந்திரனிட
மேலான கோல்காரன் மேன்மையுடன் தோணினானே.

தரு: தெந்தினாதினாதி நன்னா தெந்தி நாதினா

17. பச்சை நெல்லரிசி யெந்தன் பல்லைப் பாருங்கோ
பாங்கான சொல்லழகன் வாயைப் பாருங்கோ
நிச்சயமாய்க் கொண்டை யழகைப் பாருங்கோ
நீலமுழிகண்கள் ரெண்டு நெற்றி பாருங்கோ
மச்சரேகை என்முதுகில் மார்பைப் பாருங்கோ
எங்கும் வயதுடையான் சொன்னாமெல்லாம் நீங்கள்
சொல்லுங்கோ.

எத்திப் பசப்பி என்னை ஏய்க்கிரத்துக்கு
என்மீதில் குத்துமலை வைத்தழுத்துருள்
முத்துக் கடுக்கன் எந்தன் மோகன மாலையை – கண்டு
முட்டத்துடனே வந்து சய்கை பேசுருள்
சித்திரத்தை பெரியாத்தை நீங்கள் கேளுங்கோ
இந்து சீமாட்டி செய்யும் நியாயம் பாருங்கோ.

கிருஷ்ணசுவாமி தன்வாழ்த்தில் வந்து பிறந்தேன்நான்
என்பேருங் கிண்கிணி கோமாளி யல்லவோ
பாலைநகர் தன்னில் வாழும் கன்னிகையம்மன்
பாதம் கண்டு தொழுதேற்றிக் கொண்டும் நாமோ.

கலிப்பா

18. பஞ்சடிப் பவளச் செவ்வாய் பள்ளியாரோடு பள்ளன்
வஞ்சக மில்லாமல் மகளுடன் நீண்ட நேரம்
செஞ்சியில் மதனன்போல செகந்தனில் உதித்து வாழும்
கஞ்சம ராசன் பண்ணைக் காரனும் தோன்றினானே.

தரு: தெந்தினாதினாதினன்னா தெந்தி

19. மந்தி முகமும் பெறு.........ந்தி வயலும்
மாறு கண்ணுந் ....அஞ்சாறு மயிரும்
குந்தி நடக்கும் நடையேந்திய பல்லும்
வெற்றிகூறி..............த ஊத்தை நாறிடும் வாய்
வந்து தயிர்போலே பீளைசிந்திய மூக்குமாய்
வந்தான் பண்டாரமாகக் கொண்டாடவே
தந்தன தந்தருளும்மை காமாகடதிவரம் பெற்ற
கஞ்சமந ரேந்திரன் பண்ணைக்காரன் வந்தான்.

வசனம்

பண்ணையக்காரன் வந்த பிறகு பள்ளன் பள்ளியன் வந்து கும்பிட கிறபடியினாலே பண்ணைக்காரன் கும்பிடு வாங்காமலிருந்த படியினாலே பள்ளன் போய் மூத்த பள்ளியை அழைக்கிற விவரம்.

தரு

20. வஞ்சரை யிணங்குங் கஞ்சம நேந்திரன் வாழும்
பண்ணை நாயனார் வந்தாராம்
அஞ்சலென் றனன் எல்லோரையும் கூட அழைத்துவா
வென்றருளி யாதரவே
தஞ்சமின்னும் நமக்கவர் தானும் அல்லாமல்
வேறே தருவார்களுடன்டோ
பஞ்சடிக்குமிலே பண்ணை யாண்டாரே
பதம் பணிந்திடுவோமே.

பள்ளனார் பதம் பணிந்திட வேணு மென்றாக்கால்
பண்ணை யாண்டவ ரென்னை யழைப்பார் இதம்
கிளர்ந்திடும் பின்னாலே நானும்
வந்ததே கத்தால் கணகாரிய முண்டோ
கிளர்ந்திடும் சிங்காரப் பள்ளி வளவில் இல்லையோ
இங்கே வந்தாய் நீருந்தான்
கிளர்ந்திட நீசெய்த தெல்லாம்
யிறுக்குதுநீ போமாலப் பள்ளா.

தருமனாகிய கஞ்ச மகாராசன்
தனது பண்ணைப் புதுனாயினார் வந்து
சொந்தமாய் அவள் ஆளு யிங்கனுப்பி வரச்சொல்ல
சொல்ல நான் போகாதே போனால்
குந்த குந்த அடித்திடுவா ரென்னை
குறைவுங் கீர்த்தி வருத்தந் தனக்கல்லோ
சிந்தையில் பகை வையாதே யென் செய்வேன்
சிறுமை செய்யாதே பாலையில் பள்...மலைக் கள்ளி
கஞ்சிரநகர் பள்ளி மறுநகர் விட்டுவந்த பிறகு
காமமீறிக் கொண்டதனால் அவள் கைக்குள்ளாகி
அடங்கியே போனாள்.

அம்மே மணம் நானுஞ் செய்த நாள்முதலா
யென்னை மேற்கே பார்த்தால் கிழக்கே நீபார்ப்ப
நான் வோம்பலுக்கு உடம்பெடுத்தே நான்
உகந்தழைத்ததும் போதும் போ பள்ளா.

தரு: அன்னன நன்னனா நான்னனா

21. அணங்கு மதியும் போலே அன்புடனே நீ நிருவோரும்
வணங்கிப் பண்ணையினாரை வாழ்த்துவம் வாடி
வாழ்த்தவே பின்கொண்ட வங்கணப் பள்ளியை
நான்தவ ராமலே நயந்து கூட்டிப்போ
கூட்டிப்போ வென்றென்னை குடிலாகச் சொல்லாதே
நாட்டகத்தா ரென்னை நகையாரோ பள்ளி
நகையா ரென்றால் நீ நானுங் கூடி
சதியாக யிருந்தது சகலரும் அறிவார்
அறிவார் அறிவாரென்று அசங்கிதம் செய்யாதே
மறியாதை போகாமல் மானத்தைக் காரும்
மானத்தைக் காரென்று மதியாமல் சொன்னாய் நீ
தானறிந்த வார்த்தை தலை நாளிலையோ
நாளில் இல்லாக்கதை நட்டனை பேசாதே நான்
எளிதமாய் புத்தி ஏழையாய் போனேனடி
ஏழையாய்ப் போனேன் என்றிருப்பவே யிருவோரும்
தாழை மலர்மணம் போல் தயவாக வாழ்வோம்
தயவாகிஞ்சம ராசன் தானருள் நயினாரை
யின்பமாய் தொழுதொன்றாய் இருவோரும் யிருப்போம்.

விருத்தம்

22. மேதினிப் புகழுவாழும் விசையராகவன் மகிபன்
சோதரனாக வாழும் சுகம்...மனரேந்திரன்
காதலால் அனுப்பும் பண்ணைக் காரனைக் கண்டுபள்ளன்
மாதரு பள்ளந்தானும் வந்தடி வணங்கு வேனே.

வசனம்

பள்ளருக்கெல்லாம் படியளக்கும் பண்ணை யாண்டவனே கும்பிடு வருகுதய்யா சுவாமி. பள்ளன், பள்ளியர், பண்ணையக்காரரைக்கண்டு கும்பிடுகிறார்கள்.

தரு: தெந்தினாதினாதி நன்ன தெந்தினாதினாதிநா

23. சத்திய வாசகன் கும்பிடுகிறோம் — எங்கள்
தாஷ்டிக முள்ளவனைக் கும்பிடுகிறோம்
தெய்வநிலை யுள்ளவரைக் கும்பிடுகிறோம்
புத்தி மிகுந்தவனைக் கும்பிடுகிறோம்
புண்ணியவான் உன்னைக் கும்பிடுகிறோம்
சிந்தந் தெளிந்தவனைக் கும்பிடுகிறோம்
தெய்வநிலை யுள்ளவரைக் கும்பிடுகிறோம்
குத்துமுலை மாதர் மகன் கஞ்சம நரேந்திரன்
கொண்ட பண்ணைக்காரா வுன்னைக் கும்பிடுகிறோம்
கும்பிடுகிறோம் ஆண்டையே கும்பிடுகிறோம்
எங்கள் குடும்பனும் நானுமாக கும்பிடுகிறோம்.

வசனம்

அடே வாடா கொலுக்காரா அந்தப் பள்ளன் பள்ளியன் எப்பேர்ப்பட்ட பேரும் வந்து கும்பிட்டதினாலே மெத்தவுஞ் சந்தோஷமாச்சு. அந்த மூத்த பள்ளியைக் கூப்பிட்டு தன்னுடைய பிறப்பு வளர்ப்பு எல்லாம் சொல்லிக் கொண்டு வரச் சொல்லடா, கொலுக்காரா. கொலுக்காரன் அப்படியே வரச் சொல்லுகிற னய்யா. கொலுக்காரன் அடி வாடி மூத்த பள்ளி உன்னுடைய பிறப்பு வளர்ப்பு சொல்லடி பள்ளி. மூத்த பள்ளி அப்படியே சொல்லுகிறேன் கொலுக்காரண்ணே.

கலிப்பா

24. பாரபட்சம் எண்ணாமல் பார்த்திடும் நாம் ஒருவனுக்கு
தாரமுண் டாகியபின் தன்மனம் வேராகாதோ
காரணையான் குடைகர்த்தன் கஞ்சம நாரதிபதி
பேர்சிறந்த பள்ளியர்கள் பெருமையெல்லாம் பேசுவாளே.

தரு

தெந்தினாதினாதி நன்னா

25. வஞ்சகப் பாண்டியனைச் செஞ்சிலம்பாலே நிறைந்த
வதைத்த கன்னகைத்தாயே சுகத்துடனே
கஞ்சமலைத் திருமுருகர் மிஞ்சியே வளரும் பாலைக்
காட்டில் வந்தநாளி லென்னைக் கூட்டியே வந்தான்
கொஞ்சப் புத்தியினாலே கெஞ்சி வந்த பள்ளனைக்
கொண்டாட்ட மாகக்கொண்ட பெண்டாட்டி நான்
பஞ்சாயுதனைப் போந்து கஞ்சம பூபதியாளும்
பள்ளன் கொண்டாடி சிவபத்தி பண்ணினாண்டே.

முத்து வர்ணப் பட்டுச்சேலை முப்பது பொன்னும்
வெள்ளி மோதிரங் கடகம் தாலிபீலிபொன் பத்து
கொத்து வளையுடன் காப்பு கொண்டைக் குப்பியும் பொன்னில்
கோர்வையான நீலமணியும் பத்துப் பொன்னும்
பத்து கோட்டை விதைநெல்லும் பலருங்காணவே சபையில்
பரிசமென்று தந்து வெகுவரிசையுஞ் செய்தான்
எத்திசை யெல்லோருங் காண என்னையுங் கொண்டான்
இவர்க் கேத்த தொருமூத்தபள்ளி நானே ஆண்டே.

இளையபள்ளி தன்னுடைய பிறப்பு சொல்லுகிற விவரம்.

தரு: தெந்தி

26. இஷ்டத் துடனிலத்தில் காமாட்சித் தாயை
வைத்தேகாம் பரன்வாழும் காஞ்சி எந்தனூர்
சட்டத்துடன் ஏனனது கட்டழகைக் கண்டு
மெச்சி சத்தியஞ்செய்து பலபுத்தியுஞ் சொல்லி
மட்டிச் சிரிக்கி கையில் கட்டுப்பட்டா லென்னை
வைத்தான் வயலுக்கொரு வித்தாகவே
பட்டண சுவாமி யெங்கள் கஞ்சம பூபதியாளும்
பள்ளன் கொண்ட கோவிந்த பள்ளினான் ஆண்டே.

விந்தையான பவழமாலை சின்னி மணியும்
இழைமேவுஞ் சித்திரப்பட்டுச்சேலை கைக்கடகமும்
சந்தமான தோள்வளை சரிகை மோதிரம் காதில்
சாரும் பொற் பணிதி சேரும் கோர்வை தாலியும்
அயந்தேருக்கிட மாடுஅன்பது பொன்னும்
என்மே லாசையாகத் தேடிவந்து யெல்லாந்தந்து
இந்திரசால வித்தையினால் என்னையுங் கொண்டான்
இவனுக்கிசைந்த தோரிளையபள்ளி நானே ஆண்டே

பள்ளன்சொல்

27. சத்தியந் தவராமல் எத்திசையும் புகழ் அரிச்
சந்திர னென வந்தருளு சந்திர புயனம்
வுத்தக சங்குதிற சுத்தி வரவே
நரவாகனத் திலேறிவரும் மோகனரூபன்
வந்து வசனற் குபகாரன் நித்திய கல்யாணன்
மதுரை மீனாட்சி பாதம் தினம் தாளாட் செய்யும்
பத்தி மிகுந்து கஞ்சம நரேந்திரன் அவருடபாதம்
மறவாமல் வாழும் பள்ளநான் ஆண்டே.

வசனம்

அடே வாடா கொழுக்காரா பள்ளன் பள்ளியர் பிறப்பு வளர்ப்பு பெரும்பேறு பலம் எல்லாம் சொல்லிக்கொண்டு வந்ததினாலே மெத்தவும் சந்தோஷமாச்சுது மூத்தபள்ளியைத் தன்னுடைய நாட்டு வளப்பம் நகர் செழிப்பும் எல்லாம் சொல்லிக் கொண்டுவரச் சொல்லுங் கொழுக்காரா.

கொழுக்காரன்: அப்படியே சொல்லுகிறேன் அய்யா. அடி மூத்த பள்ளக்கா, உன்னுடைய நாட்டுவளப்பம், நகர் செழிப்பும் எல்லாம் சொல்லச் சொல்லி பண்ணை யாண்டவன் கேட்கிறார்கள் சொல்லடிபள்ளி.

மூத்தபள்ளி: அப்படியே சொல்லுகிறேன் கொழுக்காரண்ணே.

விருத்தம்

28.தன்மகுண பரிபாலன் சத்திய அரிச்சந் திரனெறில்
மன்மதன் கஞ்சம வேள் மகாராச நன்னாட்டில்
பொன்மை மிகுப் பள்ளியர்கள் போர்ந்துவுற வுரைத்தற்பின்
நன்மை யுடன்சிறந் திருக்கும் நாட்டுவளஞ் சொல்லுவாளே.

தரு

29.மாட மாளிகை யெங்கெங்கும் மேவும்
மதனைத் தேடி வரிக்குயில் கூவும்
நாடெல்லாம் செழும் சென்னல் செழிக்கும்
நளின்மாதர் முகங் கொண்டொளிக்கும்
வீடெல்லாம் சிறுமீன் விளையாடும்
விளங்கும் வாணர் செழுங் கவிபாடும்
தேடினேன் புகழ் கஞ்ச மாராசன்
தென்தெருவே தெரு வெங்கள் நாடே.

மாதந் தோறும் மும்மாறி பொழியும்
வண்ணங்கள் தோறும் வசனம் புரியும்
நாத கீதங்கள் எங்கு மொலிக்கும்
நளின மாதர் முகங்கொண் டொளிக்கும்
தூது மாமலர் சோலைகள் தோறும்
தழைத்த மாவில் குயிலிசை கூவும்
ஞாதி யோர்திருக் கஞ்சம பூபதி
நண்ணும் பாலைநக ரெங்கள் நாடே.

இளைய பள்ளி நாட்டு வளப்பம்

30.மாட மாளிகை கோபுரங் கன்னகை
மண்டபம் பொன் னரண்மனை வாசல்
ஆட ராகம் பளிங்கொளி மேவிய
அன்ன சத்திரம் பிராமண வீதி

நீடு மாமணி கெச்சை யளவிச்சீர்
நித்தமும் பந்தல் வைத்த ழகாக
நாடி லங்கிய கஞ்சமா ராசன்
நண்ணுங் காஞ்சி நகரெங்கள் நாடே.

பள்ளன் தன்னுடைய நாட்டுவளப்பம் சொல்லுகிறான்

31. மத்தளம் தவில் பேரிகை வீணை
மல்லாரி துந்துமி முழங்கிடும் முடி
கத்து பூரிகை தம்பூரு வீணை
கனக தப்புத் தினமு முழங்கப்
புத்தி யோடுயிர் நாவலர் பாடும்
புண்ணிய குணந் தன்னில் விளங்குஞ்
சித்திர ராசன் திருவேங்கிட கஞ்சமன்
தீரன் வாழுஞ் செழுந்தருள் ஊரே.

கோமாளி நாட்டு வளப்பம்

32. சோளச் சோறுண்டுத் தொய்யற் கரியுண்டு
கம்பஞ் சோறுண்டு பண்ணைக் கீரையுண்டு
காடெல்லாம் செடி வனங்களு முண்டு
கனத்த கள்ளி மரங்களு முண்டு
நாடெல்லாம் தின்னக் கொள்ளுப் பருப்பு
நரைத்த ராகிக் களிகளு முண்டு
கோம ணமே மொச்சைப் பயரு முண்டு
கோங்கு பெறுத்திருநா டெங்கள் நாடே.

வசனம்

அடே வாடா கொலுக்காரா பள்ளன் பள்ளியள் நாட்டுவளப்பம் சொல்லிக் கொண்டு வந்தது சரியே. அய்யனவர் பரமாந்தி அந்த வயலிலே சென்னல் கதிரெல்லாம் தின்று சுகித்து சந்தோஷமாக குயில்கள் வளர்த்து கூவுகிற பாவனை சொல்லிக்கொண்டு வரச் சொல்லடா கொலுக்காரா.

அப்படியே சொல்லுகிறேனய்யா.

அடே வாடா ஆண்டிவேல் குடும்பா குயில்வந்து யாரையாரைச் சொல்லிக் கூவுகிறதோ யெவரை யெவரைச் சொல்லி வாழ்த்து கிறதோ சொல்லிக் கொண்டு வாடா.

அப்படியே சொல்லிக்கொண்டு வருகிறேன் கொலுக்காரா.

கலிப்பா

32. இம்மை மறுமை யிரண்டும் நினைந்தெந் நாளும்
நன்மை செய்யுங் கஞ்சமவேள் நராதிபதி நன்னாட்டில்
செம்மை களெல்லாந் தெளிந்து செப்பியபின் சித்திரஞ்சேர்
கொம்மை முலையாள் குயிலை கடவிவரச் சொல்வாளே.

குயில் தரு

அன்னனன்னா னானானானானா நன்னனானானா
அன்னனன்ன

33. சீர்பூத்த கோதண்ட பாணிகண் ணகையம்மன்
செல்வி மீனாட்சி காமாட்சி யனுதினமும்
பார்பூத்த கீர்த்திமான் கஞ்சம நரேந்திரனை
பட்சமுடன் வாழ்கவே கூவாய்நீ குயிலே
நாவலர்கள் கொண்டாடுங் கஞ்சம நரேந்திரனை
நன்மையுடன் வாழ்கவே கூவாய்நீ குயிலே
தேவராச னுதவு விசையராகவர்க் கிளைய
செட்டியார் வாழ்கவே கூவாய்நீ குயிலே
மதிவலவன் சேரமான் புத்திரன் சேர்கறிகோமான்
மகாராசன் வாழ்கவே கூவாய்நீ குயிலே
சீரிலகு அகமலையில் தென்தெருவை யெள்ளாளும்
செல்வமுடன் வாழ்கவே கூவாய்நீ குயிலே
பாண்டியனை வென்ற பழிமீண்டமும் கண்ணகைத்தாய்
பாலைநகரஞ் செழிக்கக் கூவாய் நீ குயிலே
நீண்ட புகழ்மிகுந்த ரவன் நரேந்திரனை
நீடுழி வாழ்கவே கூவாய்நீ குயிலே

தேசம் புகழ்விரண செட்டியார் மகராசன்
செல்வமுடன் வாழ்கவே கூவாய் நீ குயிலே.
முசுவண்டணி குவளைத் தன்மராசன் அரசப்ப
முதலியார் வாழ்கவே கூவாய்நீ குயிலே
மன்னர்புகழ் எட்டுவகை பலரான் வர்க்கத்துக்கும்
மடிச்சீலை பெறுகவே கூவாய்நீ குயிலே
தாழ்வில்லா முப்பத் திரண்டுகுடி முத்தமார்
தங்கள்கிளை வாழ்கவே கூவாய்நீ குயிலே
வாழ்வுமிகு பட்டணத்தாரை பற்றும் பெரியகர்ணனு
மணியக்காரன் வாழ்கவே கூவாய்நீ குயிலே
திட்டமுடன் திருமலை ஆண்டகுரு நாதயனும்
தேவயனும் வாழ்கவே கூவாய்நீ குயிலே
இஷ்டமுள்ள சங்கர மூர்த்திச் சின்னய்யபிள்ளை
என்னாளும் வாழ்கவே கூவாய்நீ குயிலே
செகமகிழ வருமகிமை ராமய்யன் சொக்கய்யன்
சீருடனே வாழ்கவே கூவாய்நீ குயிலே
அகமகிழக் கணக்கெழுதும் அணஞ்ச பெருமாள்பிள்ளை
அன்புடனே வாழ்கவே கூவாய்நீ குயிலே
அனுதினமும் இருபத்து நாலுமனையார் புவியில்
அன்புடனே வாழ்க்கவே கூவாய்நீ குயிலே
மனுநீதி தவராத வேட்சந்துரி லுள்ளோர்
வன்மையுடன் வாழ்கவே கூவாய்நீ குயிலே
ராசன்புகழ் நோன்பு கொடுப்பத் திரண்டுகுடி
நன்மையுடன் வாழ்கவே கூவாய்நீ குயிலே
நேசமிகு அஞ்சுபத்தாறு தேசத்தி லுள்ளோர்
நீடூழி வாழ்கவே கூவாய்நீ குயிலே
சிங்கார மாகவே வலங்கைய்யோர் குலம்தழைக்கச்
செப்புமுடன் வாழ்கவே கூவாய்நீ குயிலே
கொங்காரு கிறகத்தான் கஞ்சம நரேந்திரன்
குலுத்திலுள்ளோர் தழைத்தோங்க கூவாய்நீ குயிலே.

வசனம்

அடா வாடா கொலுக்காரா. குயில் கூவினயாவனை யெல்லாம் சொல்லிக் கொண்டு வந்தது சரியே. இப்பவானால் அய்யனவர்கள் வீட்டிலே மழைபெய்கிறபடி பண்ணைத் தெய்வங்களுக்கு பொங்கல் வைக்கச் சொல்லி அந்தப்பள்ளன் பள்ளிகளுக்குச் சொல்லடா.

அப்படியே சொல்லுகிறேனய்யா.

கலிப்பா

34. திங்கள் வதனன் திருவேங் கிடராயன்
எங்கள்துரை கஞ்சம நரேந்திரன்தன் நன்னாட்டில்
மங்குவெழுந்து மழைபொழிய பள்ள ரெல்லாம்
பொங்கலிட்டு தெய்வநிலை போற்றி வணங்குவாரே.

35. மங்கை மார்கள் எல்லோருங் கூடியே
மகிழ்ந்தே மனந் தெளிந்தே...யவே
தெய்வநிலை மருவு புகழ் பெருகும்

பொங்க மாகவே பொங்கல் போடவே
பூப்பந்த லுண்டாக்கி பொன்னாலலங் கரித்தார்
கனமின்னா லெங்கும் விரித்தே
சாந்தால் தரைமெழுகி நல்லதண்ணீரில் முழுகி
தந்திமா முகப் பிள்ளை யாருக்கு
முந்தவே பூசை முடித்துச் சேர்த்தாகவே
வீதியா லெங்கள் தேவி அழா அம்மை
செப்பமாய்ப் பொங்கல் ஒப்ப மாயிட்டு
தெண்டம் செய்து கொண்டோம்.

ஆராயிர மாதர்க் கன்னகை அய்யாயிரம் தேங்காய்
அந்தி நேரத்தி லுடையுமது சந்திமாடமு மடையு
வீரபத்திர காளித் தாயாக வெட்டுமேளங் கொட்டு
மெத்தமுந் திரிக்காய்ச் சாராயம் சுத்திவைத்துப் போந்து.

தேவேந்திரன் மகள் பூசனை செய்வீர்
மலர் கொய்வீர் செஞ்சேவலு மூன்றடிப்பீர்
முன் சாராயங் குடிப்பீர்
மாவேந்திரன் புகழ் கஞ்சமராசன் நன்னாட்டில்
மழை பெய்யவே விளையும்
வயல்மலைப் பள்ளர் எல்லோருமே.

தெந்தினாதி னாதினே

36. பொங்கலிட்டு தெய்வநிலை போற்றி வணங்கி
எங்கள் புலியெனும் நாம்பேர்பெரிய உதிரமாடனும்
எங்கள்குல தெய்வத்துக்கு ஏற்ற கிடா
இங்கிருக்க ஏழை பள்ளி ஆட்டைவெட்டிச் சங்கடஞ்
செய்தான்
நங்கையர்கள் நாத்தியர்கள் குடும்பனாரே
நாகரீகம் பேசலாச்சு ஏச்சு மாச்சு
பங்கமளிப்பேன் துருசுபரிசு மளிப்பேன்
யிதுவு பரனவற்கு ஏற்றிடுமோ பண்ணையாண்டே
ஆச்சு ஆச்சு கும்பிடவே வேண்டாம் பள்ளா
வீட்டுக்கு ஆகாத பெண்ணைக் கொண்டு
ஆண்டாயே போடா
சீச்சி சீச்சு நில்லாதே தெய்வ காணிக்கை நீ
செலவு செய்த ஊதாரி பாலைக் குடும்பா
பேச்சாச்சு தளைதந்த யிளை பிள்ளைக்கு நான்
பிள்ளை கொடுப்பேன் பல பள்ளரறிய
(மூத்த பள்ளிமேல் வந்த பண்ணை தெய்வத்தை பள்ளன் மேலே வரச்சொல்லுகிற விவரம்)

37. சங்கிலிக் கருப்பண்ணா வந்திரங்கிக்கோ
சகலமான பேய்ச்சித்தாயே வந்திறங்கிக்கோ
விந்தை யிருளப்பன் வந்திறங்கிக்கோ – எங்கள்
வீரபத்திர ஐயனாரே வந்திதங்கிக்கோ

அந்தரமான கன்னிமாரே வந்திரங்கிக்கோ
ஆதீனத்துக் குடையவனே வந்திரங்கிக்கோ
மாலான மங்கை கன்னி வந்திறங்கிக்கோ
ஆலவடிக் கதுப்பா வந்திறங்கிக்கோ.

எங்களம்மை காமாட்சித்தாயே வந்திறங்கிக்கோ
பூலா வுடையுவளே வந்திறங்கிக்கோ
புதுக் குடியில் சாத்தாவே வந்திறங்கிக்கோ
நீலா விநோதஞ் செய்யும் பாலைநகரில் – பள்ளீ
உனக்கேற்றினது போதுமோ இன்னும் வேணுவோ

(அந்த பள்ளனானவன் பேரிலே தெய்வம் வந்து பள்ளம் பொதுக்கமாட்டாமல் தெய்வத்தை நிறுத்தைச் சொல்லி மூத்த பள்ளியை பள்ளன் வணங்கிச் சொல்லுகிற விவரம்)

தரு அன்ன நன்ன நானே நன்ன நானா னன்னானா

38.இறக்கடியோ பள்ளி – இறக்கடியோ
இந்தக்கனம் யார்சுமப்பார் – இறக்கடியோ
கறக்க யிரண்டு யெருமைமாடு கொண்டு தருவேன்
படுக்கக் கச்சுக்கட்டில் மெத்தை தருவேன் இறக்கடியோ
முறுக்குவளை சிந்தரக்கு மோகன மாலை உனக்கு
வர்ணச் சேலை தருவேன் – இறக்கடியோ
சிறக்க வுன்னை சேர்ந்திருப்பேன் – இறக்கடியோ
சிவனறிய ஆணையிட்டேன் – இறக்கடியோ
இறக்கடியோ பள்ளி இறக்கடியோ
இந்தக்கனம் யார்சுமப்பார் இறக்கடியோ

(தெய்வங்களுக்கு யெல்லாஞ் செய்து கும்பிட்டதின் பிறகு மழை பெய்கிறதற்கு மழை குறிப்பு காணுகிற விவரம்)

39.செந்திரு மால்திலங் கும்புயன் திம்மப்ப நரேந்திரனருள்
மைந்த னெனில் கஞ்சமவேள் மகாராசன் நன்னாட்டில்
செந்திரு வாய்ப்பள் ளியர்கள் தெய்வநிலை கூறியபின்
அந்தரத் தில்மின்னி மழைஆரம் பமுண் டாகினதே

தரு: தெந்தினா தினாதி தன்னா தெந்தினா

40.மேகமெல் லாந்தான் கறுத்தொன்றாகக் கூடுது – மெத்த
மின்னல் மின்னி இந்திரன்கை வில் லெடுக்குது
நாகரீகமாய்க் குளுந்த காத்தடிக்குது – முகில்
நாலு திக்குங்கூடி இடிதானி டிக்குது
தோகை மயில் மோகமுடனே நடிக்குது – எங்குஞ்
சுத்துந் தண்ணீர் தவளைகள் சத்திமிடுகுது
ஆகையினால் எங்கள்திரு கஞ்சம நரேந்திரன் – நாட்டில்
அந்தி நேரமெல்லாம் மழைவந்து பெய்யுதே
ஆத்தில் வெள்ளம் மாரளவுவரும் பேத்தமாகவே – ஆத்தில்
அக்கரை தோணிகள் எல்லாம் அக்கரையிலே
சேர்த்து எல்லாம் வரும் ஒன்றாய் ஆத்துவெளிக்கே
சென்று இக்கரை தோணிகளெல்லாம் இங்கே நிறுத்தி
நால்திசையும் காணவெண்ணைப் பந்தமெடுத்து – மேலே
நண்ணும் தொப்பிக் குடைகள் எல்லோரும் பிடித்து
பார்த்துப் புகழும் எங்கள் கஞ்சம் நரேந்திரன்
பண்ணை வயல் பள்ளமெல்லாம் பாடி யாடுங்கோ

(அய்யனவர்கள் நாட்டிலே மழை பொழிந்து ஆற்றில் வெள்ளம் வந்ததினாலே மீன் வகையெல்லாம் சொல்லிக் கொண்டு வரச் சொல்லுகிற விவரம்)

கலிப்பா

41. ஆரணப் பொருளதான அம்மை காமாட்சி நல்குங்
காரணத் தாலே வாழுங் கஞ்சமன ராசர்நாட்டில்
வாரணி தனது பள்ளன் மாதர்கொண் டாடவந்து
தாரணி யோர்கள் போற்ற தான்மழை பொழிந்ததன்றே.

மீன் – தரு

தீன தினானா தினதின்னா தினதினானா தினதினானா

42.பாகசந்தன் மேக சந்தனுக்குப் பணிந்து
சுழிந்து சுழிந்து நீர்
பாவகை நீரைப் பருகிப் பாய்ந்து மேகம் சேர்ந்துபோய்
போகச் சந்தனமாக்கி நீக்கியில் பொழிந்து
சுழிந்து வழிந்து நீர்
பொங்கிக் குறவர் தங்கள் குடிலைப் போக்கியே
யுயிர்த்தூக்கியே
மாசுமுலவு குறிஞ்சி மலரைவாரி வேரினோடரிய
மரத்தை முறித்து அரைத்துக் கரைத்து வந்து தினையே –
சிந்தியே
தோகை மாமயில் மீதிலேவரும் சுப்பராயனைப் போற்றியே
தொழுது கஞ்சமராசன் கீர்த்திபோலத் துலங்கிப்
பாலையில் புகுந்துத்துதே

தேங்கிப் பாலை வனத்தில் புகுந்த தேவி பத்திரகாளி
முன்தெண்டம், செய்து பன்றி புலிகள்
சிதறி கதறி யோடவே
தாங்கி மிலுப்பை குறவன் பாலைதழைத்த கள்ளிமுறியவே
தகத்து முல்லை நிலத்தில் புகுந்து சாடி
பொறுத்து வயலெல்லாம் தூங்கு முயல்
பாலும் நெய்யும் தோய்ந்த தயிரு மருந்தியே
துளபர் பாலைப் பணிந்து வளர்ந்து துய்ய குறிஞ்சிலேறியே
எங்கும் முயலும் மயிலும் மோட
எடுத்து திரையில் அடித்து மீன்
நாடிலங்கிய கஞ்சம ராசன் – படை
போயிருந்து மருதம் புகுந்துதே
மருத நிலத்தில் புகுந்து – பதத்தை
வச்சிர பாணி வணங்கவே – வந்து
கன்னல் தென்னைக்கும் மஞ்சளிஞ்சி வனமெல்லாம்
பொறுது வயலில் பறந்து வறப்பைப் போக்கி

மனிதரு தாமரை பொய்கை எங்கும் நிறைய
நிறம்பி பின்னு மீளுமந்த நெய்தலில்
பெரிய வருணன் பதத்தைப் பணிந்து
பெலத்த தாழைக் குலத்தையே – பிடுங்கிக்
குறவர் குடிலையெடுத்து பிணத்தை சோங்கு மிதிக்கவே
கருதித் திசையில் பலமுத்துதிறக் கலந்து
கஞ்சம பூபதி கருணைப் பெருகி கடலைகன்று
மண்டிச் சென்றதே.

தோணி –தரு

ஏலேலோ ஏலேலோ அடண்ணே
ஏலேலோ ஏலேலோ

43. காசினியோர் தான்புகழும் கஞ்சம நராதிபதி
வசமுடனே செனிக்கும் வளர்பாலை மாநகரில்
பாங்குடனே யெனக்கினிய பள்ளந்தனைக் காணாமல்
ஆசைமிகு ஆகுதடா அடா அண்ணே
அன்புடனே யெனக்குத் தோணிவிடீர்
செய்யகவி மாலையணி தீரன் கஞ்சம நரேந்திரன் துரை
வையகத்தில் கீர்த்தியுடன் வளர்பாலை மாநகரில்
கையிலணைத் தாசை தரும் என்னுட கணவனை நான்
காணாமல்
மய்யல் பெறுகுதடா வங்கணரே தோணிவிடீர்

கார்னையான் கயல்தலத்தான் அட அண்ணே கஞ்சம நாரதிபதி
சீருடனே வாழ் விளங்கும் தென்பாலை மாநகரில்
பாரமுட னென்கணவன் என்னுட பள்ளனை நான் காணாமல்
மாகு மய்யல் மீறுதடா என்னுடவங்கணரே தோணிவிடீர்

தெள்ளுதமிழ்க் கனுகூலன் தீரன் கஞ்சம நரேந்திர துரை
வள்ளளெனவே செழிக்கு அட அண்ணே வளர்பாலை மாநகரில்
வெள்ளமேல் வருகுதடா என்மிக்க பள்ளன் அக்கரையில்
பள்ளனுடன் கூடவே நான் பாங்கியரே எனக்கு தோணி விடீர்

மருவுலவு மாருதம் புலபோலே பாயுதே
மாலானது மிஞ்சி மலரணையில் மேவுதே
இரவு பகலரியாமல் சிறுபருவ மல்லவோ
எதுக்கு மன்மதன் வாதுக்கு அழைக்கிறான்
ஏலேலோ காம லேலேலோ
ஆங்கார னெங்கள் கஞ்சம நாரதிபதி
சீமானுஞ் செழித்திலகு தென்பாலை மாநகரில்
பால்மாரிப் போலச் சொரியும் அடீ அண்ணே
பள்ளந்தனை எனக்குக் காணாமல் மாமோகமாகுதடா
வங்கணரே எனக்குத் தோணி விடீர்
மருவுலகு மாருதம் புலிபோலே பாயுதே
மயலானது மிஞ்சி மலரணையில் மேவுதே
இரவு பகலறியாமல் சிறுபருவ மல்லவோ
எதுக்கு மன்மதன் வாதுக்கு அழைக்கிறான்
போன பள்ளனடிப்பானே என் புருஷனடிக்காணேனோர்
என்மனது நொந்து நொந்து இனிஎத்தனைநாள் வாடுவேனோ
கரும மெல்லாந் தீருவேனோ என்னுட கணவன் வரக் காண்பேனோ
புண்ணியனார் கஞ்சமவேள் பூபாலன் மாநகரில்
என்னுட பள்ளனுடன் கூடுவேனோ
பாங்கியரே எனக்குத் தோணிவிடீர்
பக்கமாய் யிருக்கையிலே – எனக்கு பலவிதமாய் புத்தி சொல்லி
என்னுட மிக கண்ணீர் தனைத் துடைத்து
விவரமுடன் யிருந்த பள்ளன்
சக்களத்திவந்தபின்பு எனக்குச் சாடித்தம் வந்தே நேர்ந்துதய்யோ
சீக்கிரமுடன் பாலைநகர் தீரன் கஞ்சம நரேந்திரன் வயல்
பள்ளனுடன் கூடவேனும் பாங்கியரே எனக்குத் தோணிவிடீர்
காமக்க கருங்கடல் வர்ணமது பாயுதே
கங்குலது அறியாமல் இங்கித மாகுதே
அருள்சேர வொண்ணாதோ வரவென்றால் வாராதோ
எதுக்கு மன்மதன் வாதுக்கு அழைக்கிறான்.

மணவரையில் பலனறியேன் – மாலையிட்டேன்
எனைத்தான் கைப்பிடித்து
கணவனென்றே நானிருந்தேன் – என்
கண்மனியே எனக்குக் காணாமல்
புருஷனென்றே யிருந்தாண்டா பூதலத்தோ சேர்க்கறியார்
வெள்ளமு மேல் வருகுதடா – அண்ணே
மிக்க பள்ளன் அக்கரையில்
என்னுட பள்ளனுடன் கூடவேநாம் பாங்கியரே தோணியிலே.
தாமிதமில்லாமல் லிலை மிகச் செய்கிறதே
சரசத்துடன் மோகம் உல்லாசம் மீறுதே
காமவெறி மிஞ்சியே கொஞ்சி அழைக்குது
கங்குலகு தெரியாமல் இருள் வந்து மூடுது
பார்த்து பள்ளனைக் கண்டதேயானால் பாங்காக என்
மோகம் தீருமே அண்ணே ஏலேலோ...ஏலேலோ.

விருத்தம்

44.பள்ளனுந் தோணிமீதில் பரிவுடன் வந்த போது
கள்ளமாய் அடக்கிக் கொண்டாள் காஞ்சிமா நகரில்பள்ளி
வள்ளுடன் யிருந்த போது வரவுடன் கொள்ளுந்தன்
பள்ளனே கூறுவான் கூறு வானே.

(வசனம்) மூத்த பள்ளி பண்ணையாண்டவன் பக்கத்தில் வந்து சாமி, பள்ளனை யிளைய பள்ளி யடக்கிக் கொண்டானென்று சொல்லுகிற விவரம்.

தரு

45.குடியிலிருந்த பள்ளனைக் கஞ்சியில் பள்ளி
கூப்பிட் டெழுப்பி முந்தா நாள்
அடிமைக்கு நேற்று ராத்திரி அவனும் போனான்
ஆற்றில் மேல் வெள்ளம் வருவதாச்சே
கடினப்பொய் வார்த்தையுஞ் சொன்னாள் – என் கணவனைத்
தான்

கண்டிலேன் நான் இன்று மூன்று நாள்
விடியப்போ வேலையிலே என்றாள் – என்சாமி
மீண்டு பள்ளன் வாக்காணேனே
கடுகியே கஞ்சியில் பள்ளி – என் கணவனைத்தான்
துடினமாயடக்கிக் கண்டாளே
முடுக்குடன் பள்ளனுந்தானும் – அப்பய்யோ
முறைமையுடன் போய் புகுந்தானே
சாலையிலே யிருந்த பள்ளனை – என்சாமி
சரசத்துட னழைத் தேனே
தடி கொண்டடிக்க வந்தான் காண் – என்சாமியார்க்கு
அடிமை நான் இங்கே சொன்னேனே
வடிவுள்ள கஞ்சம ராசன் – அவருடைய
யவரான பண்ணை யினாரே
படிப்படியாய்ப் பண்ணையக்காரன் – அவருடைய
பாதம் அறிய நான் சொன்னேனே

வசனம்: இளைய பள்ளி வந்து பண்ணையக் காரன் கிட்ட பள்ளனைக் காணோமென்று சொல்லுகிற விவரம்.

சிந்து

46. சத்திய வாசகன் உத்தாரம் கேள் – பண்ணையாண்டே
பள்ளன் தானெங்கே போனானோ
நானெங்கும் காணேன் காணேன் – ஆண்டே
எத்திசையும் புகழ் பாலைநகர் – பண்ணையாண்டே
பள்ளன் எங்கேயோ போனானே ஆண்டே
சாலைதனில் பள்ளைக் கூப்பிட்டால் ஆண்டே
மூத்த சக்காளத்தி வந்து யிக்கோலம் செய்தாள் காணாண்டே
குச்சிலுறங்கு கின்ற பள்ளனைக் கூப்பிட்டாள் ஆண்டே மூத்த
கோட்டாலைப் பள்ளியைக் கேட்டால் தெரியுங் காணாண்டே
அச்சமில்லாமல் அவனும் போனான் பண்ணையாண்டே – ஆத்தில்
அய்யா பெறுவெள்ளம் மெய்யாகப் பெறுகிச்சே ஆண்டே
கஞ்சி குடித்தது கொஞ்சங் காணும் பண்ணையாண்டே பள்ளன்

கள்ளு கரிகளும் கொள்ளான் அவன் பண்ணையாண்டே
யிந்த பஞ்சமா பாதகி வஞ்சகத்தால் பண்ணையாண்டே – பசி
பாராமல் அக்கரைப் பண்ணைக்கு போனான் காணாண்டே
நேத்து யிரவெல்லாம் எனக்குறக்க மில்லை யாண்டே ஆத்தில்
நீச்சு நிலையாத வெள்ளம் பெறுகிச்சே – ஆண்டே
செல்வப் புத்திரன் மெச்சு துரை கஞ்சம நரேந்திரன் நாட்டில்
பண்ணைப் பள்ளருடன் சொல்லி பார்த்து வரச் சொல்லும் ஆண்டே

பண்ணைக்காரன் சொல்

47. அச்சமில்லாமலே குச்சினிப் பள்ளி வைத்துக்கொண்
யாருடனிந்த அசங்கிதம் பேசுநாய் – கள்ளி
நிச்சய முன்வீட்டில் பள்ளனிருக்கிறான் பள்ளி – நின்று
நிஷ்டுரம் சொல்லிப் போட்டேன் கூட்டிவாகள்ளி
மாயமால் வித்தைகள் செய்யாம லிப்போதே பள்ளி – வந்தன்
வங்கணப் பள்ளனை யிங்கே யழைத்துவா கள்ளி
கோமாளி வந்துன்னை குச்சைப் பிடுங்கவான் பள்ளி – நீ
குணத்தோடே பள்ளனைக் கூட்டிக்கொண்டு வாடி கள்ளி
கள்ளத்தொழில் செய்து பள்ளனை உள்ளாக்கிக் கொண்டு கற்ற
காருட வித்தைகள் யாருடன் பேசுறாய் கள்ளி
துள்ளித்துள்ளி யென்னைத் தள்ளி நடக்குறாய் பள்ளி வந்தன்
சூதுத் திறம் யெல்லாம் நான் சத்திய வாசகன்
திம்மப்பனீன்றருள் பாலன்
யென்றும் தன்னை நம்பினபேர்களை யாதரிக்கும் குணசீலன்
வெத்தி சித்திர னெங்கள் கஞ்சமராச ஒய்யாரன் – யிந்த
சேதியறிந்தால் சீயென்று போவாய் நீ கள்ளி.

கலிப்பா

48. கச்சி நகர்க் கதிபன் கஞ்சம நாரதிபதி
மெச்சும் பண்ணைக்காரன் வீறுடனே கூறியபின்
அச்சம் பெரிதாகி அகநடுங்கிப் பள்ளனவன்
குச்சிலிருந்து கும்பிட்டுச் சொல்வானே.

தரு

49.அய்யா பண்ணையாண்டே நான் – மெய்யா
மய்யல் பூண்டேன் மணத்தாலே – ஒரு
பொய்யே உரைத்தாளே.
சிரித்தாளிடை மூத்தாள் தனை வெறுத்தான் வெறிவாக்கால் –
எனை

வெறுத்தருள வேண்டாம் சுவாமி பொறுத்தருளு மாண்டே
கொஞ்சுங் குயிலைப் போலே செஞ்சொல் அழகனார்
வஞ்சயர்கள் ராமன் எங்கள் கஞ்சம நயனார்
பண்ணை வயல்தனிலே நிண்ணய மனதுடனே
எண்ணும் எண்ணம் போலே என்னை நன்னும் – பண்ணை
யாண்டே.

வேறு

50.பள்ளனைக் குச்சியிலே வைத்துக் கொண்டு பாச்சியே
ஏயன்மேல்
பழிகள் உண்டாக்கி எள்ளளவும் பொய் சொன்னதுக்கே
உன்னை இடுப்பொடிய அடிக்க வேண்டாமோ
அடித்துப் பாரடி கஞ்சம்பூபதி அடிமைப் பள்ளியும்
துடித்துப் பேசாதே காரிய முண்டாகுமானால் நானென்றறியாமல்
சொல்லுஞ் சொல்லடி சொல்லடி பள்ளி.

கலிப்பா

51. சண்டையிட்டு யிளைபள்ளி தானும் வளர் பாலைதனில்
கண்டனுக்கு மருந்தை யிட்டு காரணமாய் அழைத்துக்
கொண்டாள்
மீண்டுமந்த மூத்தபள்ளி மீட்ப னென்ற நயனார்க்கு
கண்டதொரு சேதியெல்லாம் சாடி வந்து சொல்வாளே.

தரு: மருந்து வகை

52. காரைவேர் கருநொச்சி கத்தாழைக் கொஞ்சிவேர்
துய்பை கருஞ்சுரை வேரும் ஆனாவெட்டி அமுக்கினாவேரும்
சேரவே சுண்டை நாகதாளி வேரும்
சித்தாமுட்டி சிறு கீழான் வேரும்
யிலை வேரும் பருத்தியிலான வேரும்
பாங்காக வேகொண்டு தான்வந்து சேறவே
எல்லாம் ஒன்றாய் அரைத்துத் தேனிலே
அதைக் கூட்டிப் பிசைந்து கணவனுக்கு
மருந்தையிட்டுக் கச்சயில் பள்ளி யடக்கிக் கொண்டாளே.

கலிப்பா

53. மூத்தபள்ளி தானுரைக்க மிகுதியுமா யிளைய பள்ளி
காத்திலேயும் வாய்க்கடியா கள்ளியிவ ளென்று சொல்லி
சத்தியமாய்க் கஞ்சம் வேள்தன் பண்ணைக் காரருடன்
புத்தியுடன் ஓடிவந்து போற்றி மிகச் சொல்லுவாளே.

தரு

54. மல்லிகைவேர் முல்லிகைவேர் மாதுளை வேரும்
வக்கரத்தான் சூரிமுள்ளும் தொக்குனிணமும்
கல்லினாரும்
பல்லிரத்தம் கருங்காக்காய் பிச்சம் காடைக்கண்ணும்
கூகை நிணமும் கரும்பூனை பிச்சம் சொல்லிய காரண்டன்
வேரும்
தோகை நிணமு சிறிக்கு சுத்து புறத்திலுள்ள வேர்க
ளெல்லாம்
எல்லாத்தையும் கொண்டு நன்றாய் ஒன்றாயரைத்து
இன்பமாக ஆண்டே யவர்க்கு மருந்தை யிட்டான்
பண்ணையக் கள்ளி வேருடனே பாலையில் பள்ளிசிரிக்கி
பண்ணையககாரருக்கு மருந்தையிட்ட கள்ளி யல்லவடி.

விருத்தம்

55. சொல்லிய இளையபள்ளி சொல்வச னத்தை ஓர்ந்து
நல்லுயிர்த் தோழன் எங்கள் கஞ்சமராசர் நாட்டில்
நெல்லெல்லாம் விளையும் நல்கு கெடும்புகழ் பண்ணைக்காரன்
சல்லிய மிகுந்த பள்ளன்தன் முகநோக்கிச் சாற்று வானே.

தரு

56. மாட்டு வர்க்கமும் கட்டுங் கயறும்
மதித்த மேழி கலப்பை வகையும்
கோட்டை கட்டும் பலவிரை வர்க்கமும்
கொட்டு வர்க்கம் கொள்ளும் நுகம் மெல்லாம்.
காட்டி யின்ன துக்கின்ன தெண்ணி
களவில்லாமல் அளவள வாது
வாட்ட மில்லாமல் கஞ்சம ராசனை
வாழ்த்திச் சொல்லடா மாமல்லப் பள்ளா.

விருத்தம்

57. வஞ்சியர்கள் மனமகிழ மரிவிரிதன் சுரைதனிலே
கஞ்சம நாரதிபதி கற்பனைய வந்த பண்ணைக் காரருக்கு
வெஞ்சன முண்டெனக் கருதி மிகுந்தநிலை தவராமல்
மெள்ள மெள்ள மஞ்சளித்து சஞ்சலத்தால்
பள்ளனும் வந்துள்ள தெல்லாம் பகருவானே.

தரு

58. அம்மை மீனாட்சி கோயில் பூசைக்கரிசி
ஆக்கின தையினூறு கோட்டை நெல்
நம்மை யாளும் திருமலை யாண்டவருக்கு
நானூற்றுப் பதினாலரை கோட்டை
செம்மை சேரும் நம் கோதண்ட பாணிக்கு
திருமதிலுக் கென்று சீரகசம் பாவை
சுமையாய்க் கட்டிக் கொண்டுபோய் போட்டநெல்
சொல்ல எண்ணத் துலையா தென்னாண்டே.

இதுவுமது

59. தண்ணீர்ப் பந்தலுக் கயிஞூறு கோட்டைநெல்
தரணி ராமநாத மையனுக் கிந்தநெல்
பண்ணை தெய்வத்துப் பூசைக்கு வேணும்
பணத்துக் கஞ்சுபறை நெல் கொடுத்தேன்
கன்னகை யம்மனுக் கென்னாளும் பூமாலை
கட்ட வேணும் திட்டம தாகவே
நன்னுங் கூலிக்கோ ரயினூறுபறை நெல்லை
நானளந்து கொடுத்தே னாண்டே.

இதுவுமது

60. அன்ன தான மடத்துத் தடத்தினில்
அந்தி நேரத்தில் வந்த பேருக்கும்
பன்னுமாமறை வேதியர்க்குத் தமிழ்
பாடும் சங்கமர் புலவருக்கும்
என்னை யாண்டருள் கஞ்சம ராசனை
ஏற்றி வாழ்த்தி யிணங்கின பேருக்கும்
நன்னயத் துடனே சில விட்டது
நானூத்து கலநெல்லுண்டு முன்டென் னாண்டே.

இதுவுமது

61. இப்படிச் சில விட்ட தல்லாமல்
இருப் தின்னும் அநேகம் நெல்லுண்டு நான்
தப்புரை படியேன் சொல்லுவ தில்லையூர்
தன்னிலே பள்ளர் சாட்சிகள் உண்டு
செப்பமா யுழுங் காளைகள் ஒன்றுக்கு
சேதார மில்லைதுரை கஞ்சம நரேந்திரன்
அப்பண்ணைப் படி வந்தருள் பண்ணைக்கு
ஆண்டவா நீயறிந்து கொள்வாயே.

கலிப்பா

62. கட்டுநெல்லு அறிமதியும் களத்தளவு சுதந்திரமும்
திட்டமுடன் பள்ளனவன் தினந்தினமுந் தானெடுத்து
அட்டியில்லாக் கச்சிபள்ளி அவள்வீட்டில் வைத்ததினால்
திட்டெனவே மூத்தபள்ளி சினந்தே சேலுற்றாளே.

தரு

63. அடியோ கச்சிபள்ளி எந்தன் வாழ்வையும்
ஆவிக் கொள்ளை கொண்டாய் தானியமல்லவோ
அல்லாடி பாலையில்பள்ளி எந்தன் கையில் நீதான்
அவதூறு சொல்லவந்த தேதடி பள்ளி
ஏதடி என்று நீதான் என்னைக் கேழ்க்கவும் – உனக்
கித்தனை வம்புபேசக் காரிய முண்டோ
காரிய மறிந்தவள் போல் கதித்துப் பேசாதே – உன்
காயகத்தை விட்டுவிடு மாமாலக் கள்ளி
மாமாலக் கள்ளியென்று சொன்ன வார்த்தைக்கு – வந்தன்
வாயைக் கிழிக்க வேணும் வண்ட வெள்ளாட்டி
வண்டத்தனம் பேசாதடி பேச வேண்டாம் தொண்டைச்சிறுக்கி – உனக்கு
மரியாதை வெட்கமில்லை மதக்காரப் பள்ளி
மதக்காரி யென்று நீதான் வம்பு பேசவும் – உந்தன்
வாலிபத்து முருக்கல்லவோ வார்த்தை யேசுராய்
வார்த்தை பேச வேண்டாம் சிறுக்கி வாயை மூடிக்கோ – உந்தன்
வழக்கு நெல்லை தந்துவிடும் சதிகாரப் பள்ளி
சதிகாரியென்று மெத்த சாடை பேசாதே – இந்த
தட்ட வட்டம் நடவாதடி பாலையில் பள்ளி
பாலையில் பள்ளியென்று முறுக்குப் பேசாதே – உனக்குப்
பல்போக நாளாச்சு கச்சியில் பள்ளி
கச்சிப் பள்ளியென்று சொன்னாய் கசுமாலப்பள்ளி – உந்தன்
காலை முறிப்பேண்டி நாடக சாலை.

கலிப்பா

64.செகராசன் மெச்சிய கச்சியில் மகிழும் தீரன்கையில்
வெகுமானம் வாங்கியே விழாப்பண்ணைக் காரனை
வேண்டியபின்
சுகமாக பள்ளனுக்கு நீண்டாசைகள் சொல்லுவாளே.

தரு

65.மதனும் ரதியும் போலே மறுவி சறுவிசறுவி
இதமுட னிருவோரும் இணங்குவோம் பள்ளா
இணங்கப் பொருந்தினவள் இளைய பள்ளி யல்லாமல்
குணங்கெட்ட உன்னுடன் கூடேண்டி பள்ளி
கூடினாட றியவே கொண்டவள் தனைவிட்டு
ஓடி வந்தவள் வீட்டில் உறங்காதே பள்ளா
உறக்கத்திலும் கச்சி உல்லாசப் பள்ளியை
மறக்க மாட்டேன் பாலைமாநகர் பள்ளி
மயலுமாகவே மருவிக் காமலீலை
நானும் நீயுங் கூடி நடத்துவோம் பள்ளா
நடத்திக் கொள்வா ளெந்த நாரியர் ரெண்டுமுலை
குடத்தைவிட் டுன்னுடன் கூடேண்டி பள்ளி
கூடிய நாள் எல்லாம் குழலில் சிந்துகள் கூடி
பாடியென் வீட்டில் படுக்கவா பள்ளா
படுக்க வீடுமுண்டு பாலுஞ்சோறு முண்டு
துடுக்கொன்றுஞ் சொல்லாமல் தூரப்போ பள்ளி
தூரத்தில் போவென்று சொல்லியே நீ கொண்ட
தாரத்தைத் தள்ளவும் தருமமோ பள்ளா.

இதுவுமது

66. ஆடித் தருமத்தைக் கண்டாயேத் தழியாமலுன்
கருமத்தைப் பாரடி கசுமாலப் பள்ளி
கணவா கசுமாலப் பள்ளியைக் கருதாமல னுதினம்
வசித்துடன் ஒன்றாய் வாழும் பள்ளா.

தொண்டி

67. வாழவே கோவிந்த வங்கணப் பள்ளிக்கு
நாளுந் தொண்டு செய்து துடந்துவா பள்ளி
நடந்து போகுங் காலில் குட்டையைப் பூட்டா
துடந்து பண்ணயினாருக்குச் சொல்லுவேன் சாடி
சொன்னாலு மெனையாளும் துரை கஞ்சம நரேந்திரன்
தன்னுடன் சொல்லிக் குட்டை திறப்பிப்பேன் பள்ளி.

கலிப்பா

68. காரணையான் குடைக்கர்த்தன் கஞ்சம நாரதிபதி
சீரிலகுவே யடிமை செய்யும்இரு எம்பள்ளில்
பாரிலகும் மூத்தபள்ளி பள்ளமனக் கள்ளரெல்லாம்
ஆர்வமுடனே துணிந்து பண்ணையாளுடன் சொல்லுவாளே.

தரு

69. சத்தியம் சொல்லான் – உரைத்திடும்
புத்தியில் நில்லான் – எனை நடுமுச்
சந்தியில் விட்டான் – உறவுள்ள
பந்தியி லொட்டான்...
நித்திரை புரியான் – சொன்னாலும்
உத்தாரம் உரையான் – தினமென்மேல்
நிந்தனை வெய்வான் – அவள்தனை
வந்தனை செய்தான்
புத்தியுங் குறைத்தான் – அங்கங்கு
வைத்தது மறந்தான்.

என்னுடன் படுக்கவும் வாரான் – உண்ணவும் வடுக்கவும் தாரான்

மூத்தெனும் மங்கையாள் யிளையவளல்லவா
ஆதார விழியாள் அவளுட விரகத்தில்
முயங்கித் தினந்தினம் மயங்கினான ஆண்டே
அயலுக்கு நகையாய் ஒட்டைக் கயலுக்கு வகையாய்

பசுமா டென்பது வித்தான் – யிவன்
பொல்லா னென்பது பெற்றான்
புயலுக்கு நீர்போலச் சொரிந்தம் மிளமுயலுக் குலாவும்
சித்திர புலவர்க்குயீயான் – இவன்
முக்குடல் முடவர்க்கு மீயான் – மயல் குள்ளாகி
வேலைக்கு முயற்படாமல் பள்ளனை வட்டமில்லாமல்
குட்டையில் போய்ப் பாரும் மாண்டே
வாதுக்கு வருவான் சிலவுசெய் தேதுக்குமாகான்
என்னுடன்வள் மயலறிந்தான்...
சேர்ந்தான்...

வணங்கான் – சொல்லும் நீதிக்கு – மிணங்கான்
வயலுக்குந் தண்ணியும் பாச்சான் நன்னயம் பேச்சான்
சூதுக்குப் பொருது பள்ளரோ – டேதுக்கு விருது
உனக்கென்று சொல்லினுங் கேளான்...
......மல்லினும் தாளான்
பேதித்துப் பிடித்து சவுக்கினில் வீழ்த்து பள்ளனைப்
பிடித்த பிடியால் குட்டையில்
போட்டிடு ஆண்டே.

வேறு–தரு

70. துஷ்டப் பள்ளந்தன் – மட்டித்தொழிலைத்
தொழுது சொல்லுவேன் – முழுதுங் கேளும்
கட்டி வைத்திடும் பெட்டியில் நெல்லெல்லாம்
கள்ளுக்கும் – நார – சுள்ளுக்கும் யீய்ந்தான்
பட்டியில் மாட்டை தோட்டி விழான் கிடை
பங்கிட்டாலும் பின்னவன் கிட்டவாரான்
அஷ்ட திக்கும் புகழ் கஞ்சம நரேந்திரன்
ஆளும் பள்ளரை கேளுங்களாண்டே
உச்சமாய் வளர் கொங்கை பசுவை
ஒட்டியே குட்டி வீட்டினி லடைத்தான்

அச்சமில்லாமல செம்மறைக் காளையை – யிவன்
ஆட்டின் வீட்டினி லோட்டி விடுத்தான்
பச்சை நெல்லெல்லாம் கோடித்து மணியாக்கி
பட்டி செட்டிக்கு வட்டிக்கு அளந்தான்
குச்சை யில்லாமல் பள்ளன்செய் குற்றங்கள்
என்ன சொல்லு வேனின்ன முண்டுண்டு ஆண்டே
பண்ணைத் தெய்வத்துக் கென்று முன் வில்லடி
பாட்டுக் கென்று பணிப்பார்க் கென்று
நன்னும் சங்கிலி மாடனுக் கென்று
நாட்டில் வாழும் கறுப்பண்ணார்க் கென்று
வண்ணச் சேலைக் கொருக்காலே வாங்கி – தன்
மச்சினன் வாழும் குச்சியிலே வைத்தான்
எண்ணி எண்ணிநான் சொன்னாலும் – அவன் காதுக்
கேற்குமோ சற்றும் ஏறாதென்னாண்டே.

கொஞ்ச மத்தியில் பள்ளன் செய்கின்ற குணத்தைப்பாரு
அவன் பணத்தைப் பாராமல்
மஞ்சிப் பள்ளி உடன் கூடித்தின்றாள்
பாக்கு வெற்றிலை முறங்கங் கடையும்
அஞ்சு பொன்னுக்கு மிஞ்சவே வாங்கினான்
ஆட்டுரான் கோழி நாட்டுப் பன்றிக்கும்
நஞ்சுக் கென்றும் பத்து பொன்கண்ணனூர்
நாத்தி வீட்டினில் சேர்த்தான் ஆண்டே

சக்களத்தி என் கருமத்துடன் இவள்
தான் சொன்னதெல்லாம் நான் சொல்லக் கேளும்
மக்களுக் கென்று எக்காளப் பத்துப்பொன்
மாட மூப்பனைத் தேடிக் கொடுத்தான்
ரொக்கமாகப் பணம் நூறு பொன்னே
னோட்டம் பார்த்தவள் வீட்டினில் வைத்தான்
அக்கிரமம் பள்ளன் இப்படி செய்தான்
அல்லாம லின்னம் அநேக முண்டாண்டே

வஞ்சப் பள்ளன் கொஞ்சப் புத்தியிலே – என்
வார்த்தையும் உன்வார்த்தையும் கேளான்
மிஞ்சிப் போயிவன் காஞ்சி நகர்ப்பள்ளி
வீட்டிலே காமக் கூட்டுற வானான்
பஞ்சிட்டுப் புத்தி சொன்னாலும் வந்தவன்
பண்ணையைக் கூடாது கண்ணாலும் பாரான்
எண்ண மில்லாமல் சொன்னாலும் அவன்
காதுக்கு ஏற்குமோ சற்றும் ஏறாதென் ஆண்டே.

இளைய பள்ளிகள் காணார் சேலைமுன்
எட்டுப் பொன்னுக் கெடுத்துக் கொடுத்தான்
பழைய நெல்லெல்லாம் விற்றுவிற்றான் பத்து
பச்சடம் கொண்டு கச்சடஞ் செய்தான்
மழையும் பெய்து யிளைய பயிருக்கும் – யிவன்
வயலில் தண்ணீர்கள் சேரவும் பாச்சான்மழை
பழைய நேசம் விடாதே யதனமாய்
பார்த்துக் குட்டையில் போட்டிடு மாண்டே.

இதுவுமது

71. தோதகப் பள்ளன் பாதக வித்தையை
சொல்லப் போகாது யாலேவருக் குற்றான்
யேது சொல்லுவேன் பொழுது விடிந்தால்
இங்கு இருப்பது காமம் யிருப்பது யங்கே
சாதியோர்கள் சொன்னாலுங் கேளான்
சத்து ருவானான் நித்தரு நீலன்
காதலால் எந்தன் பள்ளனுக்குப் பயங்
காட்டான் குட்டையில் போட்டிடு மாண்டே.

வேறு – தரு

72. குட்டி செட்டி இஷ்ட மாக
மட்டைக் கொம்பு பல்லை காளை
கூழைப் பள்ளன் மகன் வாழும் சாலையில் வைத்தான்

வட்டப் புள்ளிப் பசுமாட்டை எட்டரைப் பொன்னுக்கு வித்துத்
தன்னுட மாமனுக் கஞ்சாறு சோமனெடுத்தான்,
கட்டிமேயும் எருமையைத் தொட்டியன் பட்டியிலெட்டுக்
கண்ணனூர் பணத்துக் கிவன் இன்னங் கெலித்தான்
அட்டி செய்யாமல் பிடித்துக் குட்டைதனிலே யடித்தால்
அல்லாமல் பள்ளனிவன் சொல்லான் காணாண்டே.

இதுவுமது

73. குட்டாடை நெல்லை வெட்டாடு கொண்டு – சாணாக்
குள்ளிக்குக் கொடுத்து நருக்கள்ளைக் குடித்தான்
கட்டாணி முத்துவர்ண பட்டாடை வித்துக் கென்று – செட்டி
பண்ணைக்காரன் மகன்கையில் பணம்நூறு கொடுத்தான்
இஷ்டாளனு கூலமாக முட்டாளி ளையாள் பள்ளிக்
கின்பமாக பொன்மணிகள் அன்புடன் செய்தான்
தட்டார மாடனுக்கு பத்தரைபறை நெல்லை
தானளந்து கொடுத்ததை நான் காணேன் ணாண்டே.

இதுவுமது

74. அத்தி மரத்திலே குட்டையைப் போட்டால்
அழுகிப் போவான் என் பள்ளன்
புங்க மரத்திலே குட்டையைப் போட்டால்
புழுங்கிப் போவான் என் பள்ளன்
தேக்க மரத்திலே குட்டையைப் போட்டால்
தேங்கிப் போவான் என் பள்ளன்
வன்னி மரத்திலே குட்டையைப் போட்டால்
வாடிப் போவான் என் பள்ளன்
வேப்ப மரத்திலே குட்டையைப் போட்டால்
வெம்பிப் போவான் என் பள்ளன்
இலுப்பை மரத்திலே குட்டையைப் போட்டால்
இறங்கிப் போவான் என் பள்ளன்
புளிய மரத்திலே குட்டையைப் போட்டால்
புழுத்துப் போவான் என் பள்ளன்

பனை மரத்திலே குட்டையைப் போட்டால்
பயந்து போவான் என் பள்ளன்
ஆலமரம் வெட்டியல்லோ அருகம்பில்லாலாப் பரைந்து
வாட்டமில்லாமல் என் பள்ளனைக்
குட்டையில் போட்டிடும் பண்ணை யாண்டவனே.

விருத்தம்

75. தண்டமிழ் புலவோர் வாழ்த்தும் தருமன் கஞ்சம நரேந்திரன்
பண்டு வந்தடிமை கொண்ட பாலைமா நகரில்பள்ளி
மிண்ட குண்டுனியைக் கேட்டுவிழப் பண்ணைக் காரன்கோலங்
கொண்டு பள்ளனார் காலில் குட்டையிங்குடன் சேர்த்தினாரே.

(வசனம்: பள்ளனைக் குட்டையில் போட்டதின் பிறகும் இளைய பள்ளி பள்ளன் கிட்ட வந்து சொல்லிக் கொண்டு அழுகிற விவரம்.)

தரு

76. பாலை நகர் தன்னில் வாழும் பள்ளி – சறடுசறடுகட்டும்
பள்ளனென் றெண்ணாமல் கள்ளி
சாலவே சாடியைச் சொல்லிக் கெடுத்தாள் – மூத்தச்
சக்காளத்தி தானி னைத்த காரிய முடித்தாள்
ஏழவே என்தலையின் விதியோ – அய்யய்யோ
பண்ணைக்கார எசமானார்க் கென்னபுத்தி மதியோ
வழிவசமாய் என்கணவ னார்க்குக் காலில் குட்டை
வருமென்றே நான் அறியேனே – அய்யய்யோ
பயுநகர்ப் பள்ளிஎன் கணவனுக்கு அநியாயங்கள்
செய்தாயோ பள்ளி
கள்ளி செய்த தீவினையினாலே – என் கணவனுக்கு
காலில் குட்டைவாரன் தலை விதியோ
காலமாரி தோறும் வந்து வீழ்வாள் – சிங்கக்கொடி
கஞ்சம பூபதிக் கடிமை பள்ளா.

பள்ளன் சொல்

77. காஞ்சிநகர் வாழ வந்த பெண்ணே – நீ யெனக்கு
காம லாகிரியைத் தந்த கண்ணே
சேர்ந்த சந்தன மணம் போமோ – நீயுமிந்த
தெருவில் வந்தேநின் றழுகலா மோ
ஊஞ்சல் போலே உன்மனம் ஓடாதே – தலைவிதியை
ஒருவராலும் ஒளிக்கக் கூடாதே.

இளையபள்ளி சொல்

78. ஆசையில்லா மூத்த பள்ளி பள்ளா – இதனைக்
காண வருவதுமுன் போய்விடுவா ளங்கே.

கலிப்பா

79. கஞ்சமென்றோர்க் குசேலெனும் தானும்வா ழாபாலைதனில்
வஞ்சத்தால் குட்டை மரத்தினில் பள்ளன்கிடக்க
அஞ்சலென்றே நயினார்க்கு அறிக்கையிட்டு மீட்பனென்று
பஞ்சடிசிற் றிடைசிறிய பள்ளிவந்து சொல்லுவாளே.

சிந்து

80. தொண்டர் செய்குற்றம் பொறுப்பீ ரென்றே – கையால்
பூண்டேன் பாதந் தொழுதாலும் நீயன்றி மற்றார் பொறுப்பார்
பண்ணையாண்டே
கொண்டவன் தெண்டித்தால் கூட்டி வைப்பவருண்டோ
கூவுங் கோழியடிக்கக் குருந்தடி கொண்டவருண்டோ
குண்டுணிக் காரிகுடி கேடிவார்த்தையைக் கேட்டீர் அன்று
கோபத்தினால் குட்டையில் பள்ளனைப் போட்டீர்
கடின குற்றஞ் செய்வார் பள்ளரைக்கரை...
காணுங் கண்ணில் விரல்பட்டால் கையைத்
தரிப்பவருண்டோ.

தடிகொண்டு சாலுடைத்தே விருது பெற்றவருண்டோ
தாகத்துக் கெண்ணை யுண்டங்கம் குளிர்ந்துவருண்டோ
நடனஞ் செய்நாதன் செயலன்றி ஆதரவுண்டோ – நீலி
நாடகம் போலவள் சொன்னதல்லால் கண்டதுண்டோ
கடையோர் எழுதிடும் காலமிதை வெல்லலுண்டோ – பள்ளன்
கால்குட்டை மீட்டியைப் கூட்டியனுப்பு மென்னாண்டே.

வெண்பா

81. ஆசாரக் கள்ளி அவையிலெதி ராகநின்று
பேசிப் பசப்பினாள் கூசாமல் –
பள்ளன் திருமுன்பு பட்சமுடன் நின்றவனை
தள்ளடா கோல்காரா தான்.
(மூத்த பள்ளி பள்ளனுக்குச் சோறு கொண்டு வந்து சொல்லுகிறாள்)

கலிப்பா

82. செகராசன் வந்தேனென் சேகரி பூபதிமகளும்
மகாராசன் கஞ்சமவேள் வளர்தருவை நன்னாட்டில்
வெகுமானம் உல்லாசம் மேன்மைபெறும் பள்ளனுக்குச்
சுகமாக மூத்தபள்ளி சோறுகொண்டு வந்தாளே.

தரு

83. கட்டாணி முத்து வர்ணபட்டு முடுத்தி
கள்ளுடனே சுள்ளாங் கூட்டிகரி சமைத்து
குட்டாடை நெல்லுகுத்தி சோறு வடித்து – நான்
கொண்டு வந்தே னுண்டிடும் குடும்பனாரே
பார்மிசையி லுண்டிடும் குடும்பனாரே
மூத்தபள்ளி யுந்தான் நானல்லோ குடும்பனாரே
இளையபள்ளியைத் தொழுங் குடும்பனாரே
உனக்கென்ன புத்தி சொன்னாளோ குடும்பனாரே
வளவில் வரச் சொன்னாளோ குடும்பனாரே.

மறுவார்த்தை சொன்னா லாகாதோ குடும்பனாரே
தலையில் விதிப்படியோ குடும்பனாரே
குட்டை காலில் அகப்பட்டது குடும்பனாரே
நிலைதவரி வந்ததும் குடும்பனாரே – இந்த
நிஷ்டுரமாகுமோ குடும்பனாரே.

இதுவுமது

84.அவன் நியாயமாகவே அனுதினுமு மெங்கள்
அம்மை காமா காழியம்மன ருளாலே – பெற்ற
மகராசன் கஞ்சம நரேந்திரன் பாலை
மாநகரில் மேவிடுங் குடும்பனாரே.

வேறு–தரு

85.கச்சிப்பதியைக் கண்டனளே – யென்னைக்
கண்டக் கழுவியென் மீதில்
இச்சை யில்லாமல் அனுதினமே – நீ – அவள்
ஏகபோக பிறப்பி லிருந்தாய்
அச்சமில்லாமல் நீசெய்த தீவினை – ஒன்றாகக்
கூடியனு போகமாக
பச்சை மாமரக் குட்டையுன் காலில்
பலித்த கருமத்தைப் பாரடா பள்ளா.

பள்ளன் சொல்

86.பள்ளர் கண்டா லெனை நகைப்பார்
இந்த பாடெனக்குப் படமுடி யாதே
தள்ளொண்ணாத் தடி கொண்ட கணவனைத்
தள்ளாமலே தடுத்தாள வேணும்
எள்ளளவும் களவு செய்யாமல் இணங்கி
நான் உன்னை வணங்கியிருப்பேன்
பள்ள மில்லாமல் பண்ணைபக் காரனை – கண்டு
கால் மரம் கட்டவிழ்ப்பாயே.

இதுவுமது

87.செப்பக் கேளடி யேழ்யெட்டு நாள்மட்டும்
சேரவே உயிர்பார் மெய்யானேன்
இப்பவே மழைக் காலமு மாச்சு
இருந்து குட்டையில் சாதிக்கப் போமோ
தப்பிதம் செய்த தெல்லாம் பொறுத்து
தயவுடன் நயினார்க்கு உரை செய்து
எப்படி விடுவித்த தேயானால்
இயற்கை யாகவே வாழ்ந்திருப் போமே

மூத்தபள்ளி சொல்

88.உன்னை மாயமயக்கிட்ட கள்ளி
உபாயத்தால் குட்டை மீட்டறியாளோ
முன்னே நானும் மனைக்காத்தவள்
.........................செய்திட வேண்டாம்
யின்னமனு சாளிப்பட மாட்டேனான்
என்று முன் கையில் பொருளு மரியநான்
சின்னப்பள்ளி யவளுடன் சொல்லிச்
சிறையில் குட்டையை விடுவித்துக் கொள்வாயே
இணக்கமாக யிருவருங் கூடி யிருப்போம்
உன் புத்திக் கேற்க நடப்போம்
வணக்கமாய்ப் பண்ணை யாண்டவர்க்குச்
சொல்வோம் சிறைமீட்டுக் கொள்ளுவாயே.

(வசனம்: குட்டையில் போட்டதின் பிறகும் பள்ளன் மூத்த பள்ளியைப் பார்த்து அடி எப்படியாகிலும் பண்ணை யாண்டவருக்குச் சொல்லடி பள்ளியென்ற மாத்திரத்திலே மூத்த பள்ளி வந்து தன்னுடைய பள்ளனைப் பார்த்து நகைக்கிற விவரம்).

தரு

89.கச்சைக் கட்டுத் தானுமெங்கே
சந்திர காவி உருமாலை எங்கே பள்ளா

உன் கை விரலில் மோதிரம் எங்கே பள்ளா

உச்சிதப் பாக்கிலை தின்று உதாசினம் பேசின தெங்கே

அருக்குந் தளுக்கு மெங்கே – அழகான

கையில்... கணம் மாலை எங்கே

முன்கை கடகம் எங்கே பள்ளா

கிறுக்குச் செருப்பு மெங்கே...பள்ளா

சுறுக்குப் பையும் தானு மெங்கே

சுண்ணாம்புக் காயு மெங்கே பள்ளா

...ங்குறு விட்டுமாலை எங்கே பள்ளா

அடிக்கடி கோபம் எங்கே அதட்டிய வார்த்தை எங்கே

.........சொல்லும் இளையபள்ளி தானு மெங்கே பள்ளா

காவியேறும் பல்லொளியும் கீறு சந்..................

பள்ளன் சொற்தரு

90. இன்பமாய் யிளையாளை வெறுத்தேன் – பாலையில்பள்ளி

இதேயத்த..

.........ரத்தை சொன்னாளிளையாள் – நீயதை வெகு

வர்மம் என்று மனதில் வையாதே

........ல் உன்னாணை நான் அமுர்தமாய்க் கொண்

டெல்லாஞ் செய்குவேன் னன்பு வேண்டிப்போர்

.........தோரும் வணங்கியிருப்பேன்

துன்பமிது படமுடியாதே – பாலையில் பள்ளி

சொல்லி விடுவிப்பா...

..........ந்த வார்த்தைகள் பாலையில் குடும்பா – உனக்கு

அந்த நாளையில் எங்கே போச்சுதோ

வந்துமில்..............................ன்

சொந்தமா யவளைச் சேர்ந்தாயே

சொந்தமான யிளைய பள்ளியை – பாலையில் பள்ளி

அந்த மாயுன் யிளைய பள்ளியை வந்து

விடுவிக்கச் சொல்லுமே

முந்த நாளில் பள்ளா – நீதானும் மூர்கமுடன் வந்த – போதிலே
அந்தமாய் உன் இளைய பள்ளி தான்
அடிபிடி சண்டையாய் தொடுத்தாளே.

வேறு–தரு

91. தொடுத்தா ளென்று பள்ளிநீ சொன்னாய்
சொல்லுகிறேன் கேளும் பாலையில் பள்ளி
அடித்தவளை முடுக்கித் துரத்துறேன்
அடிமை நானுனக் கல்லவோ
பிடித்த காரியம் விருது செலுத்தாதே
பிழை பொறுத்தருள் பாலையில் பள்ளி
வடித்த கஞ்சி எனக்கு உறக்க மில்லை
வானாவுங் கூடப் போகுதே பள்ளி
கணவன் நான் ஒரு குற்றம் செய்தாலும்
கருத்தில் நீயதை வையாதே பள்ளி
கஞ்சம ராசன் பாலையில் பள்ளி
காரணம் நான் அறியாமல் போறேனே
வஞ்சகம் நான் செய்திருந் தாலும்
வாழப்பாரடி பாலையில் பள்ளி.

கலிப்பா

92. நிச்சயமாய்ப் பள்ளன்சொல்ல நேசமுடன் கேட்டுப்பள்ளி
பட்சமதாய் உன்சிறை பாங்குடனே மீட்போமென்று
மெச்சுபுகழ் கஞ்சமவேள் பண்ணைக்காரன் முன்பு
அச்சமறவே நின்று அடித்துமிகச் சொல்லுவாளே.

இதுவுமது

93. பாலைநகர் பள்ளிபள்ளன் படுந்துயரம் பார்த்திறங்கி
காலில் அடித்த குட்டையை நீக்கக்கருதி எங்கள்
பாலைநகர் துரைகஞ்சம ராசன் வயலிலுள்ள
வேலையெல்லாம் செய்விக்கும் பண்ணைக்காரன் – முன்சென்று
விளம்புவாளே.

நொண்டிச் சிந்து

94. அய்யா சரணநான் கையாற்கும்பிட்டே னாண்டே – உங்கள்
ஆதரவில்லாமல் வேறெனக் கில்லை காணாண்டே
மெய்யாக வந்துன்னைக் கையாறக் கும்பிட்டேனாண்டே
வேளைக்குப் பள்ளனை ஆளாக்க வேணுங் காணாண்டே
பள்ளன் மனத்திலே கள்ளமில்லை பண்ணையாண்டே – இந்த
பாதகி செய்திடும் தோதக வித்தை காணாண்டே
நாறாக்கள்ளைக் குடித்த வெறிகொண்டு சொன்னே னெங்க
ளாண்டே
பள்ளன் காவல்விட்டால் பின்னேவேலை செய்வான் –
பண்ணையாண்டே
மாடுகன்று நெல்லுவகை எல்லாம் ஒப்பிப்பானாண்டே – குட்டை
போட்டதுனால் மெத்த நொந்து போனான் பள்ளன் ஆண்டே
நித்தம்பாரும் பசியும் இவனறியான் பண்ணையாண்டே – சத்தே
பட்சத்துடனே ரட்சித்திடும் பண்ணையாண்டே
மாதமும் மழைபெய்யச்சே ஆண்டே – பள்ளன்வந்து
பயிர் வயலிலெல்லாம் வுள்ளன் ஆண்டே
மெத்தபோத மிகு எங்கள் கஞ்சம பூபதிசொல்லால் – குட்டை
போட்டதை மீட்டிடுங் கூட்டியனுப்புங் காணாண்டே.

அகவல்

95. கார்முகி லனைய கஞ்சம ராசன்
கற்பினைப் பண்ணைக் கார்த்தவா சரணம்
சரணமென் றோதி தானுனைப்
தூரன விசனங் கேட்டு விண்ணவே வேணும்
கபடமு மறியான் விசடமுந் தெரியான்
கசடரை யிணங்கான் கணவனென் பள்ளன்
பள்ளனைக் கண்டேன் பாழ் மனதிரங்கி
மெள்ளவே வந்தேன் வினாவில் நான்பயந்து

நான் அவன் முகத்தை நலம் பெறப்பார்க்கில்
தான் அதுகண்டு பள்ளன் தாழ்ந்துகண் சோர்ந்து
தாழவே பள்ளன் தான்சொன்ன வசனம்
அளவிடப் போமோ ஆண்டவா கேளிர்
அன்னமே அமுதந்தே அருவையவர்க் கரசே
கன்னியர் திலகம் காமரதன் பதியே
துடியிடையாளே சொற்குயில் மொழியோ
கடிமலர் வீசும் கற்புடையாளே
முன்புள்ள வாசம் முடிந்து விடாமல்
பின்பிழை பொறுத்தால் பெருமையுண்டாமே
சிறுக்கி மேலாசை சேரவே மறந்தேன்
பொறுத்தருள் பண்ணை புண்ணிய ராயனே
வந்தனை யொழிய ஒருவர் மேலாசை
சிந்தனையாக சேர்க்கிலேன் கண்டாய்
இப்படி முறை கேட்டெனதுள மிரங்கி
கற்பினைக் காரா கருதியே வந்தேன்
ஆனை போலிருந்த அழகுள்ள பள்ளன்
பூனைபோல் பதுங்கி புலம்புகிறான் ஆண்டே
புலிபோலிருந்த புகழுள்ள பள்ளன்
எலிபோல் பயந்து யிணங்கினான் ஐயா
மன்புள வாசம் மறந்து விடாமல்
பின்பிழை பொறுத்தால் பெருமையுண்டோ
முலையது சரிந்தால் முன்வயறு தாங்க
பலமது குறைந்தால் பெரிய வர்தாங்க
மங்கிலியப் பிச்சை மடிப் பிச்சை தந்து
தன்குலத் தார்க்குத் தாழ்வு வராமல்
பள்ளன் செய்குற்றம் பருவினால் பொறுத்து
மெள்ளவே குட்டை விடவருள் வாயே
கால் தளைக் குட்டை கருதியே யவிழ்த்து
சாலவே யனுப்பும் சரண மையனாரே.

கலித்துறை

96. பாலை நகரப் பள்ளிபடுந் துயரம் பார்த்திரங்கி
காலில் அடித்த குட்டைகருதி யெங்கள் பாலைநகர்
கஞ்சம ராசன் சொல்குழலாள் வயல்பண்ணைக் காரனைப் போற்றி
அமுர்தா விகுல முங்களை அறிந்திட வேகூறுவானே.

தரு

97. கட்டைக் கொம்பன் சொலுமுறிச்சான் வெள்ளை
காளை மோழைக் கருங் கூழைவால்
முட்டிக் காலன் செம்மரையு மயிலைமூறி மோந்தன்
முகமுனி வில்லான் கொட்டை யாக்கன்
சுட்டித் தலைக் கொம்பன் வட்டக்குறியன்
னெடியன் சாமி வட்டப்புள்ளி சிவலையெருது
வகைக்கோ ராயிரம் மாகுண்டென் ணாண்டே.

இதுவுமது

98. சோனைக் காதன் மண்கட்டி ஆசைச் சொரியன்
மேகநீலன் சுட்டிப் பூதன் ஆனைக் காலுடன்
மட்டைக் கொம்பன் அழகு மேனாட் செம்மறைக்காளை
கோனைக் கொம்பனும் கடமைச் சிவலையும்
கூடு கொம்பனும் குடைக் கொம்பன்
வில்லன் வாளுக் காளுக்காலாளென் றிப்படி
வகைக் கோராயிரம் மாடுண் டென் ஆண்டே.

அதுவுமது

99. வளவில் நின்றிடும் காளை எண்ணாயிரம்
மாடு நாடெங்கும் ஓடி நடக்கும்
களவில் லாமல் உழும் பதினாயிரம்
காளை மோழைக் களத்தினி னிறப்பது முப்பதினாயிரமுங்

காளைகள் பாரத்திபவர் புகழ் கஞ்சம்பூபதி
ஆளல்லது, அன்று துண்டு பயிரிய
ஆளும் பள்ளனைச் சிறைவிடு ஆண்டே.
(இளையபள்ளி மூத்தபள்ளி இரண்டுபேரும் சண்டை)

தரு

100. கொண்ட கணவனுக்குச் சாடி சொல்லி
குட்டையில் போடுவித்தவள் நீயுமல்லவடி
மண்டை கொள்ள மருந்தையிட்டு கஞ்சியில் பள்ளிச் சிறுக்கி
மயக்கி அழைத்துக் கொண்டவள் நீயுமல்லவடி
தொண்டி வழையடி தோதக்காரி தொழிலும் வித்தை
களிங்கே நடக்காது போடி சண்டி
தொண்டியடி சானல்லோ வயுறு – சக்களத்தி
சாதித் தொழிலைக் காட்டாதே போடி
சக்களத்தி யென்று சொன்னவீடு திருடி
சந்திக் கயற்றால் கட்டியடித்தது சனமறியாது
கொக்கரித்து சண்டை பிடிக்கிற கோழி திருடி
கூப்பிடவே கட்டியடித்தது குல மறியாதோ
நெக்கரித்து சண்டை பிடிக்கிறநீலி நிஷ்டூரி சிறுக்கி
நேர்மையான சிரகச்சம்பா நெல்லு திருடி
தர்க்கமிட்டு சண்டை பிடிக்கிற சண்டாளி மூளி சிறுக்கி
சங்கலி குடும்பனுடன் படுத்திருக்க வல்லையோ
கொம்பன் கூத்தன் பண்ணாண்டையும் நீயுமாக சிறுக்கி
குண்டு வற்ணப் பட்டுக்காக கூடிக் கிடக்கலையோ
செம்பொன் சிந்தரக்கு செய்து கொடுக்க சிறுக்கி
தென்னந் தோப்புக் குள்ளே சேர்ந்திருக்கலையோ
கம்பிக்கரையும் சேலை நெய்து கொடுக்க சிறுக்கி
கடைப்பள்ளன் கள்ளிக் கடியிலே கட்டிக்கிடக்கலையோ
கள்ளியென்று ரைத்தாயே கசுமாலப்பள்ளி சிறுக்கி
கவி வறுது பெருமானுன்னைக் காணாரோபோடி
பள்ளியென்று ரைத்தாயே பாசாங்கு கள்ளி சிறுக்கி
பட்டிலிங்கப் பெருமானுன்னை யறியாரோ போடி.

நெல்லுவகை —தரு

101. செஞ்சம்பா கடுங்கூரை மணவாரி சித்திரைக்கா
சீரகச்சம்பா மஞ்சு வரவு
மலைமுண்டன் கஸ்தூரி வற்ண பொற்பாளை
மாதளை வாசன் புஞ்ச வாயன்
கருங்குறுவை கருவை பூச்சம்பா நெல்புனுகு சம்பா
ஒடஞ் சில்லாதார் முடிமன்னன் சொக்கன்
அரிய நாயகன் ஆரியச்சம்பா.

இதுவுமது

102. பச்சை நாயகன் பரிமள ராமன்
பூம்பாளை பாலன் கடுக்கன் பரிபாலன்
அச்ச தித்தவன் யோசனதானன் நல்லாலை கொம்பன்
அருளுள்ள தானான்
வச்ச பூஷணி மாணிக்கமாலை செல்வாலன்
செண்பக வாலன் பொற்காளி
விச்சையான திருவரங்கே சென்ன
லறமாமணி நெல் இன்ன முண்டே.

இதுவுமது

103. நாராச பாலன் நத்தவன் கதம்பன்
நன்நான கதம்பன் கோதண்ட ராமன்
நாவிரை நெல் ஈசனா ரருள்
கற்பூர சம்பா இணைவாரி
இரை வெள்ளை மூக்கன் மாசிலாக் குரும்பை களமை
அரிவிடுவ னருணைக் கடுவாலன்
காரிலா தொழி சித்தினிக் காலை
கனத்த தெய்வக் கனகச் சம்பா
வேர் முண்டகங் கறுப்பாலி சொற்னாலி
மூங்க சம்பா முளை நெடுமூக்கன்
அண்டர் போற்றும் கலியு ராமன்
குட்டாடைக் கரியணிக் கட்டி கண்டன்

என்று சொல்லும் பலவிரை வர்க்கங்கள்
எல்லாம் கஞ்சம யேந்திரன் மெச்சவே
கொண்டுவந்து நூறாயிரத்தினங் குலம்
கோட்டை கட்டியே குவித்தேன் ஆண்டே.

கலப்பை வகை

104. பட்டு நூல் கயிரொன் பதினாயிரம்
பகர் மேழி நுகம் பதினாயிரம்
கொட்டுந் தங்கக் கோலு முப்பதினாயிரம்
கொண்ட முத்துள்ள கோல் பதினாயிரம்
குட்டுந் தங்கக் கலப்பை எண்ணாயிரம்
கஞ்சம நரேந்திரன் பாலன் கலத்தினில்
மகாப்பயிர் செய்வேனது தேடிவைத்திருக்க தென்னாண்டே.

கலிப்பா – (வித்துவகை, மாட்டுவகை)

105. மேழிவகை யுள்ளதெல்லாம் – சித்தமகிழ்ந்து பள்ளன்
செப்பியபின் சீருடனே கஞ்சமராசன் வயல்பண்ணைக்காரன்
புத்தியுடனே மூகூர்த்தம் பள்ளனுடன் சொல்லுவானே

தரு

106. சித்திரை மாதம் பத்தானதேதி புதன்கிழமை
சேரும் தசமி நாள் கூடியதனில்
சுத்தமுடன் வயல்நாஎள விரை நதிடவே நல்லதென்று
சொன்னா ரமணர் முன்னா ளிலே
அத்தி நின்று சுபயோகம் வந்தது – யிப்போ
நம்மெ யாளுங் கஞ்சம ராசன்
அப்பனானைப் படிகோர்த்துள்ள எருதுகள் பத்து நூறாயிரம்
ஒன்றாகப் பூட்டி நன்றாய் உழுடா பள்ளா.

இதுவுமது

107. சண்டன் கறுப்பன் மறுதன் கருணை வள்ளி
சாத்தன் மருதன் குள்ளன் சிங்கலி புங்கன்

தண்ட கலியன் சின்னான் காடன் விடன் சுண்டன்
கலிங்கன் புலிங்கன் வெள்ளைகாலன் வேலன்
கொண்ட னிவனென்று சொல்லு பள்ளர்க ளெல்லாம்
கூடிமுழக்க மிட்டுக்..........
கொண்டாடப் பெற்றவன் றமிழோர்க் குதவுங்
கஞ்சம நாரதிபதி வயலெல்லாம் பூட்டியுழவாரும் பள்ளரே.

கலிப்பா

108. கள்ளமில்லாப் பள்ளரெல்லாம் கஞ்சம நரேந்திராதிபதிக்
குள்ள வயலெல்லாம் உழுது வரவேயதிலோ
ருள்ள மயிலை சேவுகுதிக்க வுடனே குடும்பன்
தள்ளு மளவிலவன்தன் மார்பில் பாய்ந்ததுவே

தரு

109. தஞ்ச மென்றாரடு கும்பிடுவோரை தாரிக்குந் தயாபரநீதி
கஞ்சம ராசன் பாலர்க்கு சேர்ந்த கழனிதனை யுழுதிடும் போது
வஞ்சமான காளையை சென்று மரித்து நான்முன் பிடித்து
நிறுத்த
கொஞ்சமாக மிரண்டு திரண்டு கொம்பினா லிவ்வனைக்
குத்தின தாண்டே.

கலிப்பா

110. கோலமுடன் காளை கொம்பால் குத்தினபோதே
குடும்பன் கால்தளர்ந்து பள்ளன்விழக் கண்டதறியாமலால்
நிகர் கஞ்சமவேள் வளர்தருவை னன்னாட்டில்
பாலை நகர்பள்ளி கச்சிபள்ளியும் வந்துற்றனளே.

மூத்தபள்ளி – தரு

109. மத்த கஜம் ஒத்த பலத்தான் – எதிரே வந்த
மாட்டுக்கு மாட்டாம லலுத்தாய்
சத்தி யிளையாள் வளவியே அய்யய்யோ – தினம்போகச்
சஞ்சலத்தில் நாள் குறைந்தாயோ

உத்தார மென்னோடு சொல்லவே அய்யய்யோ – எழுந்திப்பாய்
உள்ளத்தில் உல்லாச மாகவே
பத்தியுடன் கஞ்சம ராசன் தனைப் பணிந்து
பாளை நகர் வாழும் பள்ளரே.

இளைய பள்ளி வாசல்

112. உன்முகத்தை பார்த்து மிருந்தேன் அய்யய்யோநீ – அல்லால்
ஒருவருடன் பேசப் பொறுக்கேன்
வுன்மூத்தாள் மீதில் நேசமோ அய்யய்யோ – உன்னை வந்து
மாடு பாய்ந்த தென்ன மோசமோ
கர்மமிது என்ன கர்மமோ அய்யய்யோ – வந்துனன்னை
கைபிடித்த நேர் வாசியோ
நன்மையுடன் கஞ்சம ணார்க்கடிமை – செய்து
நாள் தோறும் வாழும் பள்ளனே.

கலிப்பா

113. பள்ளியர்கள் யிருவரும் பணிந்து நின்று தானிரங்க
வள்ளல் கஞ்சம நரேந்திர துரைமகரா சனுக்கடிமை
கள்ள மெல்லாந் தீர்ந்து பண்ணைக்கார னுடனே சொல்வானே.

தரு

114. அய்யனெங்கள் கஞ்சம ராசனை வணங்க
அவனாப் பனைப்படிக்கு ஒப்பம் கட்டியே
செய்யலெல்லாம் உழுது சம்பாவிதை விதைத்தேன் – அது
சேற முளைத்தபின் நீருங் கட்டினேன்
பொய்யில்லா தவர்கிளை போல் சிறந்து – தினம்
புண்ணிய மத்தவார்தஞ் செல்வம் போலே வளர்ந்து
பையன வெழுந்திருந்து நாற்றுமுடி பரித்து
நடுக வாரும் பண்ணை யாண்டே.

இதுவுமது

115. ஏகபோகமாய் பரித்த நாத்துக ளெல்லாம்
அடுக்கி வரப்பில் வைத்து அன்பாகவே
செகமகழிவே கனுஞ்சேறு களக்கி – தினம்
செப்பமுடன் ஒப்பம் செய்தோம்
மகராசன் கற்னன் அவலுதாரன் – செழிக்கு
மன்மதன் கஞ்சம ராசன்
மகிபனுக்கு சுகமாக வயலில் நாளை நடுவோமென்று
சொல்லி தொழுது வாரும் பண்ணையாண்டே.

கலிப்பா

116. பள்ளன்தன் வார்த்தை யெல்லாம் பண்ணைக்காரன் கேட்டு
தெள்ளு செந்தமிழுக்கு நல்குந்திரன் கஞ்சம நரேந்திரன்
வயலில்
உள்ள பள்ளியரைப் பார்த்து ஒருமிக்கத்தானே னாற்றை
அள்ளி எல்லோரும் கூடி அவுடனே நடுவீரே.

நாற்றுநடுகிற தரு

117. மஞ்சள் பூசி குளித்து முழுகி வர்ணச்சோலை யுடுத்தி
முன்வந்து
பிள்ளை யார்க்கினிய வாழைப் பழந்தேங்காய்
மிஞ்சிப் படைத்து பண்ணைத் தெய்வத்தை வேண்டியே
கொண்டாடிக் கும்பிட்டேன்
விரைகள் நாற்றை முடியாதெடுத்கு
நெத்தியின் மீதில் வைத்துப் போய்
கொஞ்சும் பருவ பெண்க ளெல்லாம்
குற லெழும்பியே மங்கலங் கூறி
நாலு திசையும் நோக்கி கோலமிகுந்த மதவேள்
கஞ்சம நரபாலன் வயலில்
கனகலட்சுமி மருவியே களித்து
சுத்து நாற்றைப் பகிர்ந்து கடுக நடுவோம் பள்ளியரே.

இதுவுமது

118. பொன்னி கறுப்பி திருமி யுறுமி
பூலிவேலி நீலி நீள்
பூமி காமி சோமி வாமி பூரிவீலி புகழ்பெறும்
நன்னரி சிலம்பி அனைஞ்சி, நீலி, நாகி கோகி மோகினி
நாச்சி பேச்சி நடச்சி யுடச்சி
நல்லி மல்லிகை நகை முகனாம்
சின்னி கார்த்தி வெம்பி கும்பி
செயலி கதலி மத்தியச்
சித்திகளும், பேரி பூரியென்று பெண்கள் ஒப்புடன்
கன்னன் மதனை அழுக னொங்கள்
கஞ்சம ராசன் வயலிலே
கதித்து நாற்றை முடியப் பகர்ந்து
கலந்து நடுவோம் பள்ளியரே.

இதுவுமது

119. அழகன் பரிக்கு நகுலன் தமிழுக் கதிபன்
சொகுசு மிகுந்தவன்
அஞ்சுபத்துடன் ஆறுதேசத்துக் கதிபன்
மிகுந்த தமிழ் வல்லோன்
காணக் கிழ்வந்து லெகுவென கஞ்சமராசன் வயலிலே
கதித்த நாற்றை முடிய எடுத்து
கலந்து நாற்றை நடுகச்சே
குலுக்கிக் குனிக்கிக் கூழைப் பள்ளன்
குஞ்சிப் பள்ளியை கெஞ்சியே
கொங்கையைத் தொட்ட போதிலே யவள்
இங்கிதத்துடன் பேசியே
மனதுக் கிசைந்த சங்கப் புதைக்குள்
கிடப்பதைப் பாரும் பள்ளியரே
மறுக்குலாவிய துளபலட்சுமி மாலைபணியும் மகிபாலன்
வலங்கை யோர்கள் குலங்கள்
விளங்க வந்த சுந்தரமதன வேர்

திருக்குலாவிய வதனக் கஞ்சமதீரன் பாரவயலிலே
செப்பமாய்ப் பெண்கள் ஒப்பமாய் நின்று
சிறந்து நாற்று நடுகச்சே
முறுக்கிச் சிறுக்கித் தங்கச்சி யவள்
முகத்திலே – யவள் சுகத்திலே
முலையிலே நின்ற நிலையிலே
யவள் ஜெத்திலே சுருக்கத்திலே
சுருக்கமாகிய இடையிலே யிருதுடையிலே மயலாகியே
சுந்தரப் பள்ளன் வந்தவள் கிட்ட
சுழலு கிறான் பாரும் பள்ளியரே
நவரத்தினக் குடைக் கதிபன் – சுந்தர
நாரி மனம் மகிழ்வன்
நன்பினவர்க் கன்பாய் நீதி நடத்தியாளும் – தடத்திலே
சவுரியப்புடன் தேவராயன் – தருமவிசய ராகவதுரை
தமையன் கஞ்சம ராசன் வயலில் தழைத் நாற்று நடுகச்சே
அவரிப் பள்ளி நிலையும் அவள்
அறையிலுடுத்திய துகிலையும்
அமுத மோகனச் சேலையும் – முத்தார்ந்த
புருவ வில்நிலையு மதுவ
ரிதழ்க் கனி தேனையும்
இவர் துய்ய நயன மானையும்
சொகுசையுங் கண்டு சங்கப் பள்ளன்
துடருகிறான் பாரும் பள்ளியரே.

இதுவுமது

120. சிங்கக் கொடியை உயர்த்தி நாலு
திசையும் மிசையும் வாழ் அதிபத்தினோன்
தீரன் கர்ணன் உத்தாரண மோகன
சித்தசன் கண புத்திமான்
சிங்கப் புலவன் நற்கை தருவன்
தந்து நடத்து விந்தையன்
சரச கஞ்சம ராசன் வயலில்

தழைத்த நாற்று நடுகச்சே
கொங்கை குவடு குலுங்க வளைகள்
குலுங்க சங்கிலி இலுங்கப் பூ
கொண்டை குலையக் கெண்டை விழிகள்
கருணை யருவி ஓடவே — அங்கே
மங்கைப் பருவ மதாச்சி நாச்சி பேச்சியும்
அருந்தியும் சின்னக் குருந்தியும்
கும்மியடிப் பதைப் பாரும் பள்ளியரே.

இதுவுமது

121. சத்திய வாசகன் யனகுணை சரசன்
துரியன் சொல்லிய கன தருமன்
யிங்கித சீலன் தன்னைச்
சேர்ந்தவர்க் கனுகூலன்
மத்தகசம் போல் வீமன் பக்கல்வெட்டி தெங்கும்
மண்டலத்தில் வளரும் திரு வேங்கிட
கஞ்சமபூபதி வயலில் நாற்று நடச்சே
மூத்தமகள் தனைக்கண்ட சின்ன முண்டன்
மகளாசைக் கொண்டே
மூந்தாணியைப் போற்றி
மூஞ்சிவெட்டி அடித்தான் பள்ளியரே.

இதுவுமது

122. கச்சி நகர்க்கதி காரன் தேவிகாமாட்சியை தேவியை
சிங்காரமாக
வெச்சி மோகன குடைக் கர்ணன் உதாரன் — எங்கள்
வச்சிரச் சிங்கக் கோத்திரன் — தந்த
தாமரை நேத்திரன் மகள் தாம்மப்ப
யேந்திரன் சொல் கஞ்சம பூபதி
வயலில் நாற்று நடச்சே
மேலைச் சின்ன பேச்சியும் மலையாச்சி தங்கச்சி
னாச்சியும் அழகப்பனும் குழுவக் குள்ளன் செடிக்கடியிலே

இச்சையுடன் மூத்தடியே கட்டி ஏகபோகமாய்க் கூடியே
இருப்பது துகில் விரிப்பதும் பாடும் பள்ளியரே.

இதுவுமது

123. தஞ்ச மென்றோர்க்குப் காரன் வெகுசத்துரு
சங்காதியான் சொல்லும் தண்தமிழ்க் கபிமானன்
செஞ்சிலைக் கொள் ஏகுராமன் செல்வம் சேர்வனம்
திருவேங்கிட கஞ்சம பூபதி
செய்யிலே நாற்று நடச்சே
அஞ்சுக மாமொழி குஞ்சிப் பள்ளியை
ஆசைகொண்டே கண்டன் கெஞ்சியே
ஆத்திமரத் தடியிலே வந்து
நேத்து ராத்திரி முழுதுமே
கொஞ்சி கொஞ்சி அகம கிழ்ந்து
ரெண்டு கொங்கையில் நகம் பதிந்து
கோலாகலமாக வீளா விநோதம் செய்யும்
குணத்தைப் பாரும் பள்ளியரே.

இதுவுமது

124. தத்துவ போத மெஞ்ஞான வானமுக சந்திரன்
நித்திய கலியாணன் – தஞ்ச மென்றோர்க்
குபகாரன் அன்னபெரு சத்தரு சங்கார தீரன்
புத்தி மிகும் பெலவீமன் புவிபோற்றும் பலபத்திர ராமன்
புகழ்திரு வேங்கிட கஞ்சம ராசனைப் போற்றி நாற்று
நடச்சே

மெத்தை மீதினில் சென்று பருக்கச்சே
னென்னல் வெரித்த கள்ளு குடிக்கச்சே
மாஞ்சி கொஞ்சி பேசச்சே
பச்சை மீன்கரி கண்டச் சேர்ந்தது நன்கு பிடிக்கச்சே
வயலில் நல்ல தண்ணீர் சென்று மோதச்சே
நகைச்சே முலை கொடுக்கச்சே பள்ளன்
நகைக்குநான் பாரும் பள்ளையரே.

தரு

125. திருமருவு தென்பாலை மாநகரில்
செல்வம் செழித்திலகும் தீரன்கம நரேந்திரன் வயலில்
அருமையுடனே பரித்த நாத்துக ளெல்லாம் – அவனை
அண்டி வணங்காய் போல
பெருமை கொண்டவன் செய்யும் பருவம் முதிர்ந்தபின்
நீருங்கட்டினேன் பாலும் முதிர்ந்து உள்ளில பற்றின
தாண்டே.

ஆண்டவன் கோதண்ட பாணியடி வணங்கி
அன்பனெங்கள் திருவேங்கட ராயனென்று – பேர்
பூண்ட கஞ்சம நரேந்திரன் வயல் – நெல்
பொற்புடன் கற்புள்ள மாதரைப் போல் – தலைசாய்ந்து
கண்ட குபேரன் னிறமாகி கலகலெனக் காய்ந்து
விளைந்த கதிருங் கொய்து
பாண்டியன் மகள் மீனாட்சி பாதம் பணிந்து
பரிவுடன் கொய்விக்க வாடும் பண்ணையாண்டே.

கலித்துறை

126. பண்ணையன் கோதண்ட பாணியைப் போற்றி பரணிவிசீர்
மண்ணி லுள்ளோர் புகழ் கஞ்சமராசன் வயலில் விளைந்த
புண்ணிய நெல்கதி ரெல்லா மெருத்து பொலிகுவிந்து
நண்ணிய பள்ளன் பண்ணையக் காரண்டே நல்குவானே.

தரு

127. விளைந்த நெல்லெல்லாம் கொய்து பின்
வெவ்வேறே மேருமாவரை போலக் கூட்டிக்
களந்தனில் பள்ளன் பள்ளிகள் வரவரக்
கற்பின் செந்நெல்லெல்லாம் ஒப்பமா யீந்து
உள்ளந் தெளிந்து மற்றுமுள் ளோர்க்கு அளந்து
கஞ்சம ராசன் களஞ்சியம் ஆயிரத்திலு மாக்கின மாண்டே.

இதுவுமது

128. ஆண்டவன் கஞ்சம ராசன் தர்மத்துக்கு
ஐந்நூறு கோட்டை சென்னெல ளந்தேன்
பாண்டியன் மகள் மீனாட்சி பூசைக்கு
பத்து-நூறு பரைநெல் கொடுத்தேன்
நிண்ட னெங்கள் கோதண்ட பாணிக்கு
நித்திய பூசைக்கு வைத்த நெல்லிந்தேன்
கண்டாரும் மணிவராச் சிலவுக்கு
கற்பினைப் படிகட்டி வேணாண்டே

கலித்துறை

129. அலங்கார பூஷணன் கஞ்சம ராசன் சொற்படிக்கு
கலங்காமல் பள்ள ரெல்லாம் கணக்கிட்டுக் கட்டியபின்
பலங்காண பாலை நகர்பள்ளி கச்சியில் பள்ளிக்குள்ள
பெலங்காண நெல்கள் பிட்டார் கள்ளீர் வந்து பேசுவீர்கள்

தரு

130. சத்திய வாசக னெங்கள் கஞ்சமராசன் – வய யில்விளைந்த
சம்பா நெல்லிலே
குத்தி வைத்த அரிசியை எழுநூறு பரையே
கொண்டு ரொப்ப இளைகுடிக் கோவிந்த பள்ளி
அத்தை மகள் வீட்டில் வைத்து வட்டிக்களந்து
அன்பது பணத்துக் குவித்தொன்பது நாளாய்
அத்தனாயின் இவரை அரியாமலே மறைத்தாய்
யிப்படித் திருட்டுப்பள்ளிக் கென்செய் வேனாண்டே

என்னென்ன சொன்னாயடி பாலையில் பள்ளி – பண்ணை
எசமானன் கைவசமாய் யிருக்கும் மதமோ
கன்னையாக என்னை மீறிகளவு சொன் – வாயைத்
தச்சிப் போடுவேனம்ம வொத்திப் பேசடி

தச்சிப் பேசுவதை யெல்லாம் காஞ்சியில்லபள்ளி – உனக்கு
மெத்த படித்தாலும் எனக்கு வருமோ
மெத்த மெத்த கத்தாதடி பாலையில் பள்ளி – யிந்த
வித்தை யெங்கே படித்தாய்நீ அத்தைச் சொல்லடி.

இதுவுமது

131. சொல்லியே மருந்தைவிட்டு பள்ளனை யுள்ளாக்கிக் கொண்டு
தோதகி களவு செய்யும் பாதகி போடி
கலவிருந்திடும் பாலையில் பள்ளி – பள்ளன் காலில்
குட்டைபோடச் சொன்ன கள்ளியல் லவடி
கள்ளி படியளக்குஞ் சாமி நெல்லிசாடி மெத்தவும்
சொன்ன மறக்குட்டை காலில் வாராதோ
துள்ளித் துள்ளி பேசாதடி பாலையில் பள்ளி – உந்தன்
ஆத்திரமெல்லாம் பள்ளனோடே சொல்லுவேன் பள்ளி
சொன்னாலெனக் கென்னபகை காஞ்சியில் பள்ளி – உனக்கு
சொல்லவரும் பேச்செல்லாம் சொல்லும் போடி.
என்னாலே முடியாது பாலையில் பள்ளி – பள்ளனுக்கு
ஏற்கச் சொல்லி உன்னைப் பகையாக்கு வேனடி
ஆக்கவகை யிருந்தாக்கால் காஞ்சியில் பள்ளி – பள்ளனுக்கு
ஆசைப்பட்டு உன்னைப் போல அடக்கிக் கொண்டேனோ
பாக்கிய மிருந்த பாலையில் பள்ளி – எந்தன்
பள்ளன் மேலே உனக்கித்தனை பட்சமென்னடி
என்ன வென்று சொல்லுவேன் காஞ்சியில்பள்ளி – துரை
விட்டெழுந்து உன்னைப் போலே இங்கே வந்தேனோ.

தெந்தினாதி – முடுகு

132. வண்ணப்பாலை நகரில் உன்னைப் போலே சிறுக்கி
வழக்கிட்டு சண்டை செய்து வந்தேனோ போடி
வந்தவகை கேளடி சிவனருளால்
சொந்த மச்சினன் வந்திச்சையாக மரித்துக் கொண்டான்
சந்த வார்த்தைகள் பேசாதே பாலையில்பள்ளி
சாமி நஞ்சுண்ட பித்தனாத னல்லவடி போடி

வாடியென்று சொன்னாய் காஞ்சியில் பள்ளி – உந்தன்
பூவற்னன் போதனை யல்லவடி
ஆச்சிமார் நெத்தியில் கூட்டியே போயில்லையென்று
அன்று நெய்யில் கையில் மழுப்பிடித்த பித்தனல்வடி
காடுதனில் மாடு மேய்த்து நாடு மறியா – உரல்
கட்டுண்ட மாயனுந்தன் கர்த்தனல்லவடி
விட்டுண்ட மதுரையிலே பிட்டுக்கு மண்சுமந்து
பிரம்பாலடி பட்டதுந்தன் பித்தனல்லடி
தேர்களி பரிமேலேறி ஆரவாரம் செய்யாமல்
செம்பருந்திலே றிவரும் தேவனல் லவடி
ஏறிவர யீசனுக்குச் செம்பருந்து கிடையாமல்
எருது மேலேறிவரும் ஈசனல் லவடி
பாடியிறந்து வீடுறந்து உந்தன்சாமி – பஞ்ச
பாண்டவர்க்குத் தூதுசென்று பார்த்தனல் லவடி
பேர்சிறந்த சுந்தரர்க்கு ஆடுருவி – உங்கள் ஈசன்
பொல்லான தூது சென்ற பித்தனல்லவடி
அஞ்சி துரியோதிரனை வஞ்சித்து பயந்துய்யும்
அருணருக்குத் தேரூர்ந்த அயனுமல்லவடி
பஞ்சமலர் கொண்டு வந்துபூசையே – மன்மதன்
பாதம் தெரிந்து கொண்ட புறந்த னல்லவடி
வஞ்சனை யென்றறியாமல் வாலியை யம்பா
லெறிந்து நின்று எய்தானுந்தன் மாயனல்லவடி
வண்ணைக் கோலாலே எங்கள் காத்தனு தைத்ததைப்போலே
காலாலுனை யெல்லோருங் காண உதைப்பேன்
கோலமுமினாங் களம்யன் கஞ்சன் விடுத்த – மானைக்
கொம்மை முறித்தாய் போல் எலும்மை முறிப்பேன்
அரியும் சிவனும் ஒன்றாய் அறியாமல் நீயும் – நானும்
ஆங்க நங்கள் செய்யாமோ
சிவன் காணாமல் கருதிப் பள்ளனுடனே
மருவி நாம் யிருவோரும்
கலந்து சுகித்திருப்போம் காஞ்சியில் பள்ளி
பாலை நகரில் வாழும் மூத்தபள்ளி – நீயும் நானும்

பட்சமுடனே

கொண்ட பள்ளனுடனே பாலை நகர்
கஞ்சம நரேந்திரனைத் தெண்ட னிட்டு
மங்களமாய் தினம் பொங்கமாய் வாழ்வோம்
மங்களம் மங்களம் சுபமங்களம்
மன்னர் புகழும் பாலை மாநகரில் – மேவிய
குடைக்கற்னன் திருவேங்கட கஞ்சம நரேந்திரர்க்கு
மங்களம் சுபு மங்களம்
தாமரை குலத்தனுக்கு சங்கீத கோபாலனுக்கு
காமல் ஆங்கார னொங்கன் கஞ்சம நரேந்திரனுக்கு மங்களம்
வேல் முறுக நாதனுக்கு விளங்கு ஒய்யாரனுக்கு
விண்ணவர்கள் தொழுதிறைஞ்சும் கன்னகை – யம்மனுக்கு
மங்களம் செய மங்களம்
கயிலாச வாசனுக்கு மங்களம்
காமாட்சி யம்மனுக்கு மங்களம்
கருணைபெறு நாயகிக்கு மங்களம் கஞ்சம நரேந்திரனுக்கு
மங்களம் செப மங்களம்
நித்திய மங்களம் செப மங்களம்
மங்களம் செப மங்களம்

கீலக ஜீசம்: ஆவணி மீ – ரு – ந்தேரி புதன் கிழமை நாள்–யரு–நாழிகை பொழுதில் கஞ்சமி செட்டியார் பள்ளு நாடகம் எழுதி முடிந்தது முற்றம்.

சம்பூர்ணம் குருபாதமே துணை.

பூந்துறையிலே யிருக்கும் சாமத் தோட்டிமகன் கறுப்பன் சுவடி. அந்தச் சுவடியைக் கொண்டுபோய் படித்த பேர்கள் கெட்டபேர்கள் நல்லோர்கள் பெரியோர்கள் பார்த்து பிரசங்கம் பண்ணி எழுத்துக் குற்றம் சொல் குற்றம் யிருந்தால் அதை பிழைதிருத்தி உடையவன் வசம் கொடுக்கவும். அதைக் கொண்டுபோய் வைத்துக் கொண்டபேர்கள் காராம் பசுவைக் கொன்ற பாவம் அடைவர். கடவுளே அதுவறிந்து கொடுத்த பேர்களுக்கு சாகா வரமும் வேகாச் சடலையும் அழியாத வரமும் கொடுத்து ரட்சிப்பார்.

அண்ணன் தாமோதரர் துணை.

பாடல் முதற்குறிப்பு அகராதி

1. முதிறுஞ்சுவை மதுரம்பெற
2. இரவிகள் சந்திரர் வயிரவர்
3. ஆங்கில வருஷமதில்
4. கச்சிநகர்க் கதியன்
5. யார்கொண்ட சீதரன்
6. அசையாத செல்வமும்
7. தினதின தெந்தின
8. தனனா தன தனனா
9. செஞ்சிவேலன் புவியில்
10. சிங்கக் கொழுவி
11. காரிலங்கு குழல்கோதி
12. தெள்ளு தமிழ்க் கறுதறுவை
13. ஆச்சியை மதுரை
14. பொற்பயில் இளையபள்ளி
15. சட்டமுடன் நீறிட்ட
16. கோலாகல முடனே
17. பச்சை நெல்லரிசி யெந்தன்
18. பஞ்சடிப் பவளச் செவ்வாய்
19. மந்தி முகமும்
20. வஞ்சரை யிணங்குங்
21. அணங்கு மதியும் போலே
22. மேதினிப் புகழவாழும்
23. சத்திய வாசகன் கும்பிடுகிறோம்
24. பாரபட்சம் எண்ணாமல்
25. வஞ்சகப் பாண்டியனைச்

26. இஷ்டத் துடனிலத்தில்

27. சத்தியந் தவராமல்

28. தன்மகுண பரிபாலன்

29. மாட மாளிகை

30. மாட மாளிகை

31. மத்தளம் தவில்

32. சோளச் சோலுண்டுத்

32. இம்மை மறுமை யிரண்டும்

33. சீர்பூத்த கோதண்ட

34. திங்கள் வதனன்

35. மங்கை மார்கள்

36. பொங்கலிட்டு தெய்வநிலை

37. சங்கிலிக் கருப்பண்ணா

38. இறக்கடியோ பள்ளி

39. செந்திரு மால்திலங்

40. மேகமெல் லாந்தான்

41. ஆரணப் பொருளதான

42. பாகசந்தன் மேக

43. காசினியோர் தாள்புகழும்

44. பள்ளனும் தோணிமீதில்

45. குடியிலிருந்த பள்ளனைக்

46. சத்திய வாசகன்

47. அச்சமில்லாமலே குச்சினிப்

48. கச்சி நகர்க் கதிபன்

49. அய்யா பண்ணையாண்டே

50. பள்ளனைக் குச்சியிலே

51. சண்டையிட்டு யிளைபள்ளி

52. காரைவேர் கருநொச்சி
53. மூத்தபள்ளி தானுரைக்க
54. மல்லிகைவேர் முல்லிகைவேர்
55. சொல்லிய இளையபள்ளி
56. மாட்டு வர்க்கமும்
57. வஞ்சியர்கள் மனமகிழ
58. அம்மை மீனாட்சி
59. தண்ணீர்ப் பந்தலுக்
60. அன்ன தான மடத்துத்
61. இப்படிச் சில விட்ட
62. கட்டுநெல்லு அறிமதியும்
63. அடியோ கச்சிபள்ளி
64. செகராசன் மெச்சிய
65. மதனும் ரதியும் போலே
66. ஆடித் தருமத்தைக்
67. வாழவே கோவிந்த
68. காரனையான் குடைக்கர்த்தன்
69. சத்தியம் சொல்லான்
70. துஷ்டப் பள்ளந்தன்
71. தோதகப் பள்ளான்
72. குட்டி செட்டி இஷ்ட
73. குட்டாடை நெல்லை
74. அத்தி மரத்திலே
75. தண்டமிழ் புலவோர் வாழ்த்தும்
76. பாலை நகர் தன்னில்
77. காஞ்சிநகர் வாழ வந்த
78. ஆசையில்லா மூத்த

79. கஞ்சமென்றோர்க் குசேலெனும்

80. தொண்டர் செய்குற்றம்

81. ஆசாரக் கள்ளி

82. செகராசன் வந்தேனென்

83. கட்டாணி முத்து

84. அவன் நியாயமாகவே

85. கச்சிப்பதியைக் கண்டனளே

86. பள்ளர் கண்டா லெனை

87. செப்பக் கேளடி

88. உன்னை மாயமயக்கிட்ட

89. கச்சைக் கட்டுத்

90. இன்பமாய் யிளையாளை

91. தொடுத்தா லென்று

92. நிச்சயமாய்ப் பள்ளன்சொல்ல

93. பாலைநகர் பள்ளிபள்ளன்

94. அப்பா சரணநான்

95. கார்முகி லனைய

96. பாலை நகரப் பள்ளிபடுந்

97. கட்டைக கொம்பன்

98. சோனைக் காதன்

99. வளவில் நின்றிடும்

100. கொண்ட கணவனுக்குச்

101. செஞ்சம்பா கடுங்கூடரை

102. பச்சை நாயகன்

103. நாராச பாலன்

104. பட்டு நூல் கயிவாரன்

105. மேழிவகை யுள்ளதெல்லாம்

106. சித்திரை மாதம்
107. சண்டன் கறுப்பன்
108. கள்ளமில்லாப் பள்ளரெல்லாம்
109. தஞ்ச மென்தாரடு
110. கோலமுடன் காளை
109. மத்த கஜம் ஒத்த
112. உன்முகத்தை பார்த்து
113. பள்ளியர்கள் யிருவரும்
114. அய்யனெங்கள் கஞ்சம
115. ஏகபோகமாய் பரித்த
116. பள்ளன்தன் வார்த்தை
117. மஞ்சள் பூசி குளித்து
118. பொன்னி கறுப்பி
119. அழகன் பரிக்கு நகுலன்
120. சிங்கக் கொடியை
121. சத்திய வாசகன்
122. கச்சி நகர்க்கதி காரன்
123. தஞ்ச மென்றோர்க்கு
124. தத்துவ போத மெஞ்ஞான
125. திருமருவு தென்பாலை
126. பண்ணையன் கோதண்ட
127. விளைந்த நெல்லெல்லாம்
128. ஆண்டவன் கஞ்சம
129. அலங்கார பூஷணன்
130. சத்திய வாசக னெங்கள்
131. சொல்லியே மருந்தைவிட்டு
132. வண்ணப்பாலை நகரில்

பின்னிணைப்பு –1

பள்ளு இலக்கியப் பட்டியல்

கால வாரியாக

நூல்	ஆசிரியர்
16ஆம் நூற்றாண்டு	
1. திருவாரூர் பள்ளு	சுடலை ஞானப் பிரகாசர்
17ஆம் நூற்றாண்டு	
2. இரும்புலிப்பள்ளு	–
3. குருகூர்ப்பள்ளு	சடகோபப்புலவர்
4. மன்னார் மோகனப் பள்ளு	–
5. முக்கூடற்பள்ளு	–
18.ஆம் நூற்றாண்டு	
6. வையாபுரிப்பள்ளு	வேலச்சின்னோவையன்
7. வைசியப்பள்ளு	சங்கர மூர்த்திப்புலவர்
8. வடகரைப் பள்ளு	கடிகை முத்துப் புலவர்
9. பருளை விநாயகர் பள்ள	சின்னதம்பிப் புலவர்
10. தில்லைப்பள்ளு	மாரி முத்துப் பிள்ளை
11. திருமலை முருகன் பள்ளு	பெரியவர் கவிராயர்

12. திருப்புவன வாயிற் பள்ளு	சர்க்கரைப்புலவர்
13. தண்டிகைக் கனகராயன்	சின்னக்குட்டிப் புலவர்
14. ஞானப்பள்ளு	தெல்லிப்பழை பேதுருப்புலவர்
15. சேற்றூர்ப்பபள்ளு	சங்கரமூர்த்திக் கவிராயர்
16. செண்பகராமன் பள்ளு	–
17. சீகாழிப்பள்ளு	சிதம்பரநாத முனிவர்
18. சிவசயிலப்பள்ளு	இராமநாதன் கவிராயர்
19. குற்றாலப் பள்ளு	–
20. கதிரை மலைப்பள்ளு	–
21. கண்ணுடையம்மன் பள்ளு	முத்துக்குட்டிப்புலவர்
19ஆம் நூற்றாண்டு	
22. ராசைப் பள்ளு	கவிக்குஞ்சர பாரதி
23. கொடுமளூர்ப் பள்ளு	நல்ல வீரப்பப் பிள்ளை
24. கோட்டூர்ப் பள்ளு	வெள்ளைப்புலவர்
25. ஞானசித்தர் புள்ளு	வேலாயுதசாமி
26. தரும சாத்திரப் பள்ளு	கவிக்குஞ்சர பாரதி
27. திருவிடைமருதூர்ப் பள்ளு	வெறிமங்கையாகக் கவிராயர்
28. தென்காசைப் பள்ளு	இராமநாதக் கவிராயர்
29. புதுவைப் பள்ளு	பொன்னு செட்டியார்

30. போரூர்ப் பள்ளு	–
31. மாந்தைப் பள்ளு	சிதம்பர தாண்டவ மதுர கவிராயர்
32. முக்கூட்டுப்பள்ளு	பழநிசாமிப் பிள்ளை
33. பொய்கைப் பள்ளு	அங்கமுத்துப் புலவர்
34. வேதாந்தப்பள்ளு	ஆவிடை அம்மாள்
35. பழனிப்பட்டி செட்டிப்பள்ளு	–

பெயரளவில் தெரியவரும் பள்ளு நூல்கள்:

1. உரிமை நகரர் பள்ளு
2. சங்க நாயகர் பள்ளு
3. கூடற் பள்ளு
4. தஞ்சைப் பள்ளு
5. திருக்கோட்டியூர்ப் பள்ளு
6. திருச்சுழியல் துணை மாலையம்மை பள்ளு
7. திருச்செந்தில் பள்ளு
8. திருநீலகண்டன் பள்ளு
9. வைத்தியப்பள்ளு

நூல்களின் குறிப்புகள் வழியாக அறியவரும் பள்ளு நூல்கள்

1. திருமக்காப்பள்ளு
2. சாமாத்தூர் மாவாணராய சுபேந்திரன் பள்ளு
3. ஏம்பல் முத்தையசாமிப் பள்ளு
4. பெருநாழி வில்லியணைத் தேவர் பள்ளு
5. சாத்துடையான் பள்ளு
6. திருநெல்வேலி வண்ணாரப்பேட்டை வேலாயுத அடிகள் பள்ளு
7. கழுமலைப் பள்ளு
8. வேளாளர் பள்ளு

சொல்லடைவு

அக்மலையில் 33
அச்சமறவே 92
அச்சமில்லாமல் 46
அசங்கிதம் 21
அசையாத 6
அஞ்சலென்றே 79
அஞ்சுபத்தான 3
அட்டியில்லா 62
அடண்ணே 43
அடிகள் 8
அடிமை 91
அடிமைக்கு 45
அடியவர்க்கு 8
அணங்கு 21
அத்திரமரத்திலே 74
அத்திவேர் 52
அத்தை மகள் 130
அதிரசமும் 8
அதிருங்கழல் 1
அதிரும்படி 1
அந்தமாய் 90
அநேகம் 61
அப்பமுடன் 8
அப்பராயனை 42
அம்புய 13
அம்மை 41
அமுக்கினாவேடும் 52
அமுதயோகனிச்சேலை 119
அமுர்தாவி 96
அயலுக்கு 69
அரங்கேற்றினாரே 3
அரசப்ப முதலியார் 33
அரி 132
அரிச்சந்திரனெழில் 28
அருணை 2
அரும்கண்டாடவே 13
அல்லாடி 63
அவதூறு 63
அழகப்பனும் 122
அழகன் 119
அழகனார் 49
அழா அம்மை 35
அறிக்கையிட்டு 79

அறிமதியும் 62
அன்னசத்திரம் 30
அனுகூலன் 121
அஷ்டதிக்கும் 70
ஆங்கில 3
ஆச்சிமார் 132
ஆச்சியை 13
ஆசாரிக்கள்ளி 61
ஆண்டவர் 61
ஆண்டே 25
ஆண்டையே 23
ஆதீனத்து 37
ஆரவாரம் 132
ஆரியச்சம்பா 101
ஆலமரம் மரத்திலே 74
ஆனைவெள்ளணி 52
இசைந்தருளும் 7
இடிமுடிதனை 8
இடுப்பொடிய 50
இணக்கமாக 88
இதழ் 119
இந்தக்கனம் 38
இந்திரசால 26
இந்திரன் 40
இம்மை 33
இமையவர் 2
இரவிகள் 2
இருளப்பன் 37
இலுங்கப்பூ 120
இலுப்பை மரத்திலே 74
இழைமேவுரு 26
இளநீர் 13
இளையபள்ளி 12, 13, 14
இறக்கடியோ 38
இஷ்ட 25
உச்சிதம் 89
உஞ்சலத்தில் 110
உத்தாரம் 46
உத்தாரம் 69
உதாசினம் 89
உதித்து 18
உதிரமாடனும் 36
உதிரும்படி 1
உபாயத்தால் 88
உருமாலை 89
உருவுடனே 8

உல்லாசம் 43
ஊஞ்சல் 77
எசமானன் 130
எண்ணாயிரம் 99
எத்தி 17
எத்திசையும் 27
எள்ளளவும் 86
ஏப்பம் 114
ஏர்கொண்டோர் 7
ஏழைபள்ளி 36
ஐயனாரே 37
ஒப்புடனே 8
ஒய்யாரன் 47
கங்குலகு 43
கச்சிநகர்க்கதிபன் 48
கச்சியில் 6
கச்சுக்கட்டில் 38
கசடரை 95
கசுமாலப்பள்ளி 66
கஞ்சம பூபதியாளும் 25
கஞ்சமநரேந்திரன் 9, 11, 13, 14, 15, 19, 20
கஞ்சமநாரதிபதி 24
கஞ்சமராசன் 5, 7, 18
கஞ்சமலை 25
கஞ்சமவேள் 12
கஞ்சமவேள் 28
கஞ்சமவேள் 43
கஞ்சமனேந்திரன் 3, 4
கஞ்சிநகர் 4, 20
கஞ்சியில் 45
கட்டழகன் 15
கட்டழகை 26
கட்டாணி 73
கட்டாணி 83
கட்டுநெல்லு 62
கட்டைக் கொம்பன் 97
கடகம் 89
கடிமலர் 95
கடுக்கன் 102
கடுக்கன் 17
கடைப்பள்ளன் 100
கண்ணகைத்தாய் 33
கண்ணகையம்மன் 59
கண்ணத்தாய் 8
கண்ணனூர் 72

கண்ணில் 11
கண்மணியே 43
கணணகை 30
கணவன் 91
கத்தாழை 52
கதம்பன் 103
கதித்த 119
கதித்து 63
கதிபன் 4
கயலுக்கு 69
கயறும் 56
கருங்காக்காய் 54
கருங்குறுவை 101
கருங்கூரை 101
கருஞ்சுரை 52
கருணை 107
கருநொச்சி 52
கருப்பண்ணா 36
கரும்பூனை 54
கல்லினாரும் 54
கலிங்கன் 107
கலியன் 107
கலியுகராமன் 103
கழணிதனை 109
கள்ளத்தொழில் 47
கள்ளவிழி 12
கள்ளு 46
களஞ்சியம் 127
களரியில் 14
கற்ணன் 115
கற்பனை 14
கற்பூரசம்பா 103
கறுஞ்சேறு 115
கறுத்நுவை 12
கறுப்பன் 107
கறுப்பாலி 103
கறுப்பி 118
கன்னல் 42
கன்னிகையம்மன் 17
கன்னிமாரே 37
கன்னியர் 95
கனகலட்சுமி 117
கனமாய் 8
கஜம் 110
காசினியோர் 43
காடன் 107

காணிக்கை 36
காத்திலேயும் 53
காதலால் 71
கஸ்தூரி 101
காமலிலை 65
காமா 84
காமாச்சி 6
காமாதிபோல் 12
கார்கொண்ட 5
கார்முகிலனை 95
காரனையான் 24
காரனையான் 43
காரியம் 91
காரிலங்கு 11
காரைவேர் 52
கால் மரம் 96
காலன் 107
கிண்கிணி 17
கிருஷ்ணசுவாமி 17
கீர்த்திமான் 33
கீழான்வேரும் 52
குச்சினிப்பள்ளி 47
குசேலெனும் 79
குஞ்சிப்பள்ளி 123
குட்டாடை 73
குட்டி செட்டி 72
குடிலை 42
குடும்பனும் 23
குடும்பா 36
குடைக்கதியன் 119
குடைக்கர்த்தன் 69
குடைகர்த்தன் 24
குண்டுணியைக் 75
குத்துமுலை 17
குந்தி 19
கும்பமுலை 13
கும்பிடுகிறோம் 22
குயிலிசை 29
குருந்தடி 80
குரும்பை 103
குவளை 33
குழல்கோதி 11
குழுவக்குள்ளன் 122
குள்ளன் 107
குறிஞ்சி 42
கூடைகை வ

கூசாமல் 81
கூழைப்பள்ளன் 72, 119
கெண்டை விழிகள் 120
கெந்தனில் 18
கேளுங்கோ 17
கைவசமாய் 130
கொக்கரித்து 100
கொக்குனிறமும் 54
கொங்கை 14, 119
கொஞ்சிவேர் 52
கொட்டுவர்க்கம் 56
கொடியோர் 2
கொண்டவன் 80
கொண்டை 11
கொண்டைக்குப்பியும் 25
கொத்துவளை 25
கொந்தளப் 13
கொம்மை 33
கொய்து 127
கொய்வீர் 35
கோங்கு 32
கோட்டாலை 46
கோடண்ட 5, 7
கோத்திரதீரன் 10
கோத்திரன் 122
கோதண்டபாணி 125, 126
கோதண்டவாணி 13
கோமாளி 17
கோமாளி 47
கோர்வை 13
கோர்வையான 25
கோல்காரன் 16
கோலமுடன் 110
கோலாகல 16
கோவிந்த பள்ளி 130
கோவிந்தபள்ளினான் 26
கோனைக்கொம்பனும் 98
கோஷ்டத்திலும் 2
சக்களத்தி 43
சங்கடஞ்செய்தாள் 36
சங்கப்புதை 119
சங்காரமூர்த்தி 33
சங்காரதீரன் 124
சங்கிலி 37
சட்டத்துடன் 26
சண்டன் 107

சண்டையிட்டு 50
சத்தம் 2
சத்திய வாசகன் 121
சத்தியந் 27
சத்தியம் 69
சத்துரு 123
சத்ருக்களையே 23
சதிகாரியென்று 63
சதியாக 21
சதுராய் 3
சந்திரகாவி 15
சந்திரகாவி 89
சந்திரர் 2
சந்திரன் 124
சம்பாவிதை 114
சரசத்துடன் 43
சரணம் 8
சரிகை 26
சவுரியப்பன் 119
சறுவிசறுவி 65
சாடி 50
சாடியை 76
சாத்தன் 107
சாதி 100
சாதியோர்கள் 71
சாராயம் 35
சாலையிலே 45
சிங்க 10
சிங்கலி 107
சிங்காரப்பள்ளி 20
சித்தசன் 120
சித்தாமுட்டி 52
சித்திடை 9
சித்திரசேலை 11
சித்திரஞ்சேர் 33
சித்திரத்தை 17
சித்திரப்பட்டுச்சேலை 26
சித்திராசன் 31
சித்திரை 106
சிந்தரக்கு 38
சிந்துரத்தாள் 8
சிவன் 132
சிவன்றிய 38
சிவனருளால் 132
சிறுமீன் 29
சிறையில் 88

சின்னத்தம்பி 3
சின்னப்பள்ளி 88
சின்னமுண்டன் 121
சின்னப்யபிள்ளை 33
சின்னான் 107
சின்னி 26, 118
சீதரன் 5
சீமாட்டி 17
சீமானுஞ் 43
சியென்று 47
சீர்கொண்ட 5, 7
சீர்பூத்த 33
சீரகசம்பாவை 58
சீரகத்து 10
சீரிலகு 33
சீரிலங்கு 11
சீலன் 121
சுகமாக 64
சுகுந்தன் 7
சுகுமண 14
சுண்டன் 107
சுண்ணாம்பு 89
சுந்தரப்பிள்ளை 119
சுந்தரமதனவேள் 119
சுந்தரமான 37
சுந்தரர்க்கு 132
சுபயோகம் 106
சுமையாய் 58
சுருள் 11
சுவாமி 49
சுழிந்து 42
சுறுக்குப்பை வ
சூது 47
சூரன் 10
சூரிமுள்ளும் 54
சூரியசந்திர திபரும் 1
செகராசன் 64
செஞ்சியில் 18
செஞ்சிலம்பாலே 25
செஞ்சிலை 123
செஞ்சிவேலன் 8
செஞ்சேவலு 35
செஞ்சொல் 49
செண்பகவாலன் 102
செந்தமிழ் 5
செந்தமிழுக்கு 116

செந்திருமால் 39
செந்திருவாய் 39
செப்பமதாய் 8
செம்பருந்து 132
செம்பொன்னின் 13, 14
செம்மறை 70
செம்மை 33
செம்மைக்காளை 98
செயப்பிரசங்கன் 7
செருப்பு 89
செல்வமும் 6
செவ்வாய் 18
செவ்வாலன் 102
செழிக்கும் 29
சென்னல் 29
செவிக்கும் 43
சேவி பூபதி 12
சேர்க்கலி 8
சேர்ந்தருள் 9
சேரமான் 33
சொக்கய்யன் 33
சொரியன் 98
சொல்லழகன் 17
சொல்லுங்கோ 17
சொற்பயில் 14
சோங்கு 42
சோதரனாக 22
சோனைக்காதன் 98
தங்கக் கோலு 104
தங்கச்சி 119
தசமி 106
தஞ்சமின்னும் 20
தட்டவட்டம் 63
தட்டார மாடனுக்கு 73
தண்டமிழ் 75
தண்ணீர் பந்தலு 59
தண்தமிழ் 123
தந்திமாய் 35
தப்பிதம் 87
தப்பு 31
தம்பிக்கு 4
தம்பூரு 31
தமிழ்பள்ளே 3
தமிழ்வல்லோன் 119
தமிழுகத்தியன் 119
தமையன் 119

தயாபரந்தி 109
தர்மத்துக்கு 128
தரணி 59
தருமனாகிய 20
தரைமெழுகி 35
தலைக்கொம்பன் 97
தலைவிதியை 77
தவில் 31
தன்மராசன் 33
தாமரை 42
தாயை 6
தாலி 25
தாழை 21
தாஷ்டிக 23
திங்கள் 34
திட்டெனவே 62
திம்மப்ப 39
திரண்டு 109
திரனம்படை 7
திருமங்கையை 7
திருமுருகர் 25
திருவளர் 8
திருவேங்கிட 6
திருவேங்கிட 7, 10
திருவேங்கிடராய 125
திருவேங்கிடராயன் 34
திலகம் 95
தீர்ச்சை 13
தீவினை 85
துங்கன் 10
துங்கன் 7
துடித்து
துணையே 8
துத்தி 52
துந்துமி 31
தும்பை 52
துயரம் 96
துரியோதிரனை 132
துருஅபரிக 36
துரை 46
துரை 7
துவள 9
துளபர் 42
துளபலட்சுமி 119
துஷ்டப்பள்ளந்தன் 70
தூது 132

தூது 29
தூரணி 41
தெண்டம் 35
தெண்டனிடுவேன் 13
தெய்வநிலை 23
தெள்ளு 116
தெள்ளுதமிழ் 12
தெள்ளுதமிழ் 43
தென்பாலை 43
தேக்க மரத்திலே 74
தேங்கமுகு 3
தேசத்தாரு 6
தேவயனும் 33
தேவர்தொழும் 5
தேவராயன் 119
தேவேந்திரன் 35
தேனும் 8
தொட்டியன் 72
தொண்டர் 80
தொண்டி 100
தொண்டியடி 100
தொப்பிக்குடைகள் 40
தொய்யற் 32
தொழுதிநல்அ 8
தொழுதேற்றி 17
தோகப்பள்ளன் 71
தோகை 54
தோகைமயில் 40
தோட்டி 70
தோணிகள் 40
தோணிவிடீர் 43
தோணினாளே 16
தோதகவித்தை 94
தோதகி 131
தோழன் 55
தோள்வளை 26
தோனினாளே 12, 13, 14
நகுலம் 119
நகைச்சே 124
நகைப்பார் 86
நகையாரோ 21
நட்டனை 21
நடனம்புரி 1
நடுகச்சே 119
நண்ணிய 126
நரபாலன் 117

நரமுடைய 8
நரவாகனத் 27
நல்லி 118
நளின்மாதர் 29
நளினமாதர் 29
நறாக்கள்ளை 94
நன்னாட்டில் 39
நாகதாளி 52
நாகரிகமாய் 40
நாகி 118
நாச்சி 118
நாட்டுவளஞ் 28
நாத்தி 70
நாத்தியர்கள் 36
நாயகன் 101
நாயனார் 20
நாரியர் 65
நாவலர் 31
நாவலர்கள் 33
நாற்செரிவ ளர் 8
நாற்றுமுடி 114
நிண்ணம 49
நித்திய கலியாணன் 124
நித்திரை 69
நித்யகல்யாணன் 27
நிந்தனை 69
நியாயம் 17
நினைகுவனே 6
நிஷ்டூரம் 47
நிஷ்டூரி 100
நீச்சு 46
நீலமுழிகண்கள் 17
நீலா 37
நீலாவிடு 16
நீலி 118
நுகம் 56
நெக்கரித்து 100
நெய்யும் 8
நெல்லரிசி 17
நெல்லுவகை 94
நேசம் 70
நேத்திரன் 122
நேத்து 46
நேரம் 18
நொடித்து 11
நொந்து 43

பகவதி 8
பகிரண்டங்கள் 1
பகிரண்டமும் 1
பங்கயனை 7
பங்கயார் 2
பச்சை 17
பச்சை 85
பசும்பி 17
பஞ்சடி 18
பஞ்சடி 20
பஞ்சடி 9
பஞ்சபாண்டவர்க்கு 132
பஞ்சமலர் 132
பஞ்சாயுதனை 25
பட்சதமாய் 92
பட்சமுடன் 33
பட்சமுடன் 4
பட்டணத்தாரை 33
பட்டிலிங்க 100
பட்டுநூல் 104
படைப்போம் 8
பண்டு 75
பண்ணயினாரை 21
பண்ணை 15
பண்ணைக்காரன் 19
பண்ணைக்காரனும் 18
பண்ணைக்காரா 23
பணம் 70
பத்திரகாளி 42
பதாம்பு 7
பதினாயிரம் 104
பரிசமென்று 25
பரிபாலன் 28
பரிமளராமன் 102
பரிவுடன் 44
பல்லிரத்தம் 54
பலபத்திரராமன் 124
பலராமன் 33
பவழமாலை 26
பவளச் 18
பவனன் 1
பழம்பதியே 2
பழிகள் 50
பள்ளன் 14, 15, 18
பள்ளன் 25
பள்ளன் 9

பள்ளனார் 20
பள்ளா 20
பள்ளிச்சிரிக்கி 100
பள்ளிசை 5
பள்ளியர்கள் 24
பள்ளேசல் 4, 7
பனை மரத்திலே 74
பாக்கிலை 89
பாக்கு 11
பாக்கு 70
பாகசந்தன் 42
பாங்கியரே 43
பாசண்டன் 7
பாண்டியனை 25
பாதகி 46
பாதம் 132
பாதம் 5
பாதம்கண்டு 17
பார்கொண்ட 7
பார்பூத்த 33
பார்வைசெரி 13
பாரபட்சம் 24
பாருங்கோ 17
பாலாவி 16
பாலைநகர் 17
பாலைநகர் 33
பாலைநகர் 9
பாலைநகர் 93, 96
பாறிலங்கு 11
பிணத்தை 42
பிரகாசிக்கும் 1
பிராமணவீதி 30
பிள்ளையார் 117
பீலிபொன் 25
பீளைசிந்திய 19
புகழ்ந்தேன் 8
புங்க மரத்திலே 74
புண்ணியவான் 23
புண்ணியனார் 43
புணர்ந்தருள் 7
புத்திமான் 120
புத்திரன் 33
புதல்வன் 13
புயத்தை 5
புயலுக்கு 69
புருஷனென்றேஏ 43

புலவோர் 75
புலிங்கன் 107
புவியில் 9
புளிய மரத்திலே 74
பூசனை 35
பூசை 16
பூண்டேன் 49
பூபதி 10
பூபாலன் 43
பூம்பாளை 102
பூரிகை 31
பூரிவிலி 118
பூலா 37
பூவற்ணன் 132
பூஷணன் 129
பூஷணி 102
பெண்கள் 118
பெண்டாட்டி 25
பெண்ணோர் 7
பெருமாள் பிள்ளை 33
பெலவீமன் 124
பேச்சி 118
பேர்கொண்டு 5, 7
பேரிகை 31
பொய்கை 42
பொய்வார்த்தை 45
பொரிகடலை 8
பொருந்திய 3
பொற்காளி 102
பொற்பயில் 14
பொற்புடன் 126
பொன்மை 28
பொன்னரன்மனை 30
பொன்னி 118
பொன்னும் 25
பொன்னோலை 13
போகமாக 85
மகரமாசம் 3
மகாப்பயிர் 104
மகாராசன் 20
மகாராசன் 39
மகிபனுக்கு 115
மகிலன் 22
மங்களம் 132
மங்களமாய் 132
மங்கை 37

மங்கை மார்கள் 35
மங்கையர்கள 10
மங்கையாள் 69
மச்சரேகை 17
மச்சினன் 132
மச்சினன் 70
மஞ்சள் 116
மஞ்சிப்பள்ளி 70
மட்டிச் சிரிக்கி 26
மடத்து 60
மடிச்சீலை 33
மண்கட்டி 98
மண்டபம் 30
மண்டை 100
மண்வெட்டி 15
மணவரையில் 43
மணவாரி 101
மணியக்காரன் 33
மணியும் 26
மத்தகசம் 121
மத்தளம் 31
மதக்காரப்பள்ளி 63
மதனன்போல் 18
மதனும் 65
மதனை 29
மதியும் 21
மதிவலவன் 33
மதுரம் பெற 1
மதுரை 13
மதுரையூர் 8
மந்தி 19
மய்யல் 43
மயக்கி 100
மரியாதை 21
மரிவிரிதன் 57
மருதன் 107
மல்லாரி 31
மல்லிகைவேர் 54
மலர்மணம் 21
மலைமுண்டன் 101
மலையாச்சி 122
மழை 39
மறுதன் 107
மறுமை 33
மன்மதரூபன் 10
மன்மதன் 115

மன்மதன் 28
மன்மதன் 43
மாட்டு வர்க்கமும் 56
மாடமாளிகை 29
மாடுகன்று 94
மாணிக்கமாலை 102
மாதனை 101
மாதுளை 54
மாநகரில் 12
மாமலர் 29
மாமொழி 123
மாயனுந்தன் 132
மார்பன் 10
மார்பன் 3
மார்பிலங்கு 11
மருதம் 43
மாலான 37
மாவேந்திரன் 35
மானத்தை 21
மிஞ்சி 43
மிஞ்சியே 25
மிரண்டு 109
மின்னல் 40
மீசைமுறுக்கி 15
மீன்கறி 124
மீனவள் 8
மீனாட்சி 125, 128
மீனாட்சியை 12, 18
முகமுனி 97
முகூர்த்தம் 105
முடிமன்னன் 101
முடுக்குடன் 45
முத்து 25
முத்துமாலை 11
முதிருஞ்சுவை 1
முதுக்குவளை 38
முந்தாணி 121
முந்தாநாள் 45
முப்பது 25
மும்மாரி 29
முயங்கி 69
முல்லிகைவேர் 54
முலையாள் 33
முழுகி 117
முறைமையுடன் 45
முன்வயறு 95

முனிவார் 2
மூக்கன் 103
மூசுவண்டணி 33
மூத்தப்பள்ளி 9, 10, 11
மூத்தமகள் 121
மூத்தாள் 112
மூத்தாள் 49
மூளி 100
மெச்சும் 48
மெஞ்ஞான 123
மேகசந்தனுக்கு 42
மேகநீலன் 98
மேதினி 22
மேருமாவரை
மேழி 105
மைந்துனென் 39
மையல் 10
மோகனமாலை 38
மோகனரூபன் 27
மோதிரங் 25
மோதிரம் 26
மோழை 97
யாண்டவர் 20
யாண்டாரே 20
யார்கொண்ட 5
யெருமைமாடு 38
யேந்திரன் 122
ரகுராமன் 123
ரட்சித்திடும் 94
ரதியும் 65
ரமணர் 106
ராத்திரி 45
ராமய்யன் 33
ராமன் 49
ரிஷிசிங்க 10
வக்கரத்தான் 54
வங்கணப்பள்ளிக்கு 67
வங்கணப்பள்ளியை 21
வங்கணரே 43
வச்சிரபாணி 42
வசமாக 6
வஞ்சக 24
வஞ்சகம் 91
வஞ்சயர்கள் 49
வஞ்சரை 20
வஞ்சியர்கள் 57

வட்டவிழி 15
வடித்த கஞ்சி 91
வடிவுள்ள 45
வண்டத்தனம் 63
வண்ணப்பமாலை 132
வணக்கமாய் 88
வணங்கான் 69
வதனன் 34
வந்தனை 69
வந்திரங்கிக்கோ 37
வந்துற்றனளே 110
வயல் 15
வயல்மலை 35
வயிரவர் 2
வர்க்கங்கள் 103
வர்ணச்சேலை 38
வர்ணப்பட்டுச்சேலை 25
வர்மம் 90
வரவு 101
வரிக்கயில் 29
வருணன் 42
வலங்கய்யோர் 33
வலங்கையோர்கள் 119
வள்ளல் 113
வள்ளி 107
வள்ளி 25
வள்ளிமணம் 5
வள்ளுடன் 44
வளர்பாலை 12
வளர்பாலை 43
வன்னி மரத்திலே 74
வாசகன் 22
வாசகன் 46
வாசன் 7
வாணருக்கு 10
வாத்தியார் 3
வாய்ந்த 9
வாரணி 41
வாழைப்பழந்தேங்காய் 117
விசமும் 95
விசையராகவன் 22, 23
விஞ்சையர் 2
விண்ணவர்கள் 9
வித்தை 130
வித்தைகள் 47
வித்தையினால் 26

விதைநெல்லும் 25
விந்தை 37
விந்தைசெறி 8
விந்தையன் 120
விந்தையான 26
விநோதம் 123
விநோதம் 37
விபுடன் 107
விரதன் 1
விரைகள் 117
வில்லன் 98
விழிமாதர்கள் 7
விழியாள் 69
வீணை 31
வீமன் 121
வீமன் 7
வீரபத்திர 37
வீரபத்திரகாளி 35
வுபகாரன் 10
வூதாரி 36
வெகுமானம் 64
வெள்ளிலை 11
வெற்பென 14
வெற்றிலை 70
வெறிகொண்டு 94
வென்றருளி 20
வேப்ப மரத்திலே 74
வைகுந்தன் 7
வோம்பலுக்கு 20

துணைநூற் பட்டியல்

1. சிற்றிலக்கியச் செல்வம்

டாக்டர் ந.வீ. செயராமன்

2. சிற்றிலக்கியத் திறனாய்வு

டாக்டர் ந.வீ. செயராமன்

3. சிற்றிலக்கிய ஆராய்ச்சி

இரா. கண்ணன்

4. தமிழ் இலக்கிய வகையும் வடிவும்

ச.வே. சுப்பிரமணியன்

5. எட்டையபுரப்பள்ளு

த. பூமிநாதன்

6. தமிழ் இலக்கிய வரலாறு

கி. இராசா